KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

# நன்னெறிக் கல்வி
# PENDIDIKAN MORAL

ஆண்டு
TAHUN
3

## தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி
## SEKOLAH JENIS KEBANGSAAN (TAMIL)



KURIKULUM STANDARD SEKOLAH RENDAH
KSSR
(SEMAKAN 2017)
KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

நன்னெறிக் கல்வி PENDIDIKAN MORAL ஆண்டு TAHUN 3 SJKT

# RUKUN NEGARA

**Bahawasanya Negara Kita Malaysia**
Mendukung cita-cita hendak:

Mencapai perpaduan yang lebih erat dalam kalangan
seluruh masyarakatnya;

Memelihara satu cara hidup demokrasi;

Mencipta satu masyarakat yang adil di mana kemakmuran negara
akan dapat dinikmati bersama secara adil dan saksama;

Menjamin satu cara yang liberal terhadap
tradisi-tradisi kebudayaannya yang kaya dan pelbagai corak;

Membina satu masyarakat progresif yang akan menggunakan
sains dan teknologi moden;

MAKA KAMI, rakyat Malaysia,
berikrar akan menumpukan
seluruh tenaga dan usaha kami untuk mencapai cita-cita tersebut
berdasarkan prinsip-prinsip yang berikut:

**KEPERCAYAAN KEPADA TUHAN**

**KESETIAAN KEPADA RAJA DAN NEGARA**

**KELUHURAN PERLEMBAGAAN**

**KEDAULATAN UNDANG-UNDANG**

**KESOPANAN DAN KESUSILAAN**

Sumber: Jabatan Penerangan, Kementerian Komunikasi dan Multimedia Malaysia

KURIKULUM STANDARD SEKOLAH RENDAH (SEMAKAN 2017)

# நன்னெறிக் கல்வி
# PENDIDIKAN MORAL

தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி
SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL

ஆண்டு
TAHUN
3


**ஆசிரியர் / PENULIS**
ஈஸ்வரி ஆறுமுகம் / Eswary Arumugam
இரா. செல்வராணி இராஜேந்திரன் / R. Selvarani Rajendran
வைஜெயந்திமாலா வேலாயுதம் / Vaijayanthimala Velautham

**பதிப்பாசிரியர் / EDITOR**
இரவிக்குமார் சுப்ரமணியம் / Ravi Kumar A/L Supramaniam

**வடிவமைப்பாளர் / PEREKA BENTUK**
சாந்தி சோலை / Santhi Solai
முகமட் பாரீட் பின் பஹாருட்டீன் / Mohammad Fared Bin Baharudin

**ஓவியர் / ILUSTRATOR**
முகமட் சுஹைமி பின் ஹருன் / Mohd Suhaimi Bin Harun



SYARIKAT P. GANESAN
2018

KPM

KEMENTERIAN
PENDIDIKAN
MALAYSIA

No. siri Buku: 0063

KPM-2018-Nombor ISBN-0063
Cetakan Pertama 2018
Kementerian Pendidikan Malaysia

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

Diterbitkan untuk Kementerian Pendidikan Malaysia Oleh:

SYARIKAT P. GANESAN
No. 23, Tingkat Satu, Jalan Perhentian,
Sentul, 51100 Kuala Lumpur.
Tel : 03-40420897
Faks : 03-40422327
E-mel : spgmedia2020@yahoo.com

Reka Letak dan Atur Huruf :
Muka taip teks : TAMElango
Saiz taip teks : 16 poin

Dicetak Oleh:
PERCETAKAN MENANG SDN. BHD
30, Jalan Segambut Atas,
Resourse Industrial Park,
Segambut, 51200 Kuala Lumpur.

# PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada semua pihak yang terlibat:

- Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Buku Teks Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
- Pegawai-pegawai Bahagian Buku Teks dan Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
- Panel Pembaca Luar.
- SJK (T) Serdang, Selangor.
- SJK (T) Bandar Mentakab, Pahang.
- SJK (T) Ramakrishna, Pulau Pinang.
- SJK (T) Ladang Buloh Akar, Perak.
- SJK (T) Kajang, Selangor.
- SJK (T) Puchong, Selangor.

Penerbit telah mengambil pelbagai langkah untuk mengesan pemegang-pemegang hak cipta bahan-bahan dalam buku ini. Sekiranya terdapat pihak yang tertinggal, kami ingin memohon maaf serta bersedia berbincang dengan pihak berkenaan untuk membolehkan kami merakamkan penghargaan.



# உள்ளடக்கம்


**தொகுதி 1**

நெறி 1 : இறை நம்பிக்கை

பாடம் 1 : நாம் மலேசியர் 1

பாடம் 2 : ஒற்றுமைப் பொங்கல் 2-3

பாடம் 3 : மதிப்போம்; கடைப்பிடிப்போம் 4

**திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு** 5-7

**தொகுதி 2**

நெறி 2 : நன்மனம்

பாடம் 1 : கை கொடுப்போம் 8

பாடம் 2 : உதவுவோம் வாரீர் 9

பாடம் 3 : மனநிறைவு 10

பாடம் 4 : இணைந்த கைகள் 11

**திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு** 12-15

**தொகுதி 3**

நெறி 3 : கடமையுணர்வு

பாடம் 1 : என் கடமை 16

பாடம் 2 : கடமையைப் பேணுவோம் 17

பாடம் 3 : பள்ளியைக் காத்திடுவோம் 18

**திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு** 19-22

**தொகுதி 4**

நெறி 4 : நன்றி நவில்தல்

பாடம் 1 : நன்றி மலர்கள் 23

பாடம் 2 : சேவைக்குப் பாராட்டு 24

பாடம் 3 : நன்றி மறவேல் 25

பாடம் 4 : ஒத்துழைப்பிற்கு நன்றி 26

பாடம் 5 : சேவையை மறவேன் 27

**திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு** 28-30

**தொகுதி 5**

நெறி 5 : உயர்வெண்ணம்

பாடம் 1 : மதித்து வாழ்வோம் 31

பாடம் 2 : நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுவோம் 32

பாடம் 3 : பகைமை வேண்டாம் 33

பாடம் 4 : அமல்படுத்தி மகிழ்வோம் 34

பாடம் 5 : வாழ்த்துவோம் 35

**திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு** 36-39

**தொகுதி 6**

நெறி 6 : மரியாதை

பாடம் 1 : வருக! வருக! 40

பாடம் 2 : மதித்துப் போற்றிடுக 41

பாடம் 3 : மதிப்பும் மரியாதையும் 42

பாடம் 4 : மதித்து வாழ வேண்டும் 43

**திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு** 44-47

**தொகுதி 7**

நெறி 7 : அன்புடைமை

பாடம் 1 : பாசமிகு பள்ளி 48

பாடம் 2 : பொதுவுடைமை 49

பாடம் 3 : பள்ளியின்மீது அன்பு 50

பாடம் 4 : அன்பு செலுத்துவோம் 51

**திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு** 52-55

**தொகுதி 8**

நெறி 8 : நடுவுநிலைமை

பாடம் 1 : சிறந்த முடிவு 56

பாடம் 2 : நேர்மையைக் கடைப்பிடி 57

பாடம் 3 : சரியான தீர்ப்பு 58

பாடம் 4 : தவறு தவறுதான் 59

பாடம் 5 : இது முறையா? 60

**திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு** 61-63

**தொகுதி 9**

நெறி 9 : துணிவு

பாடம் 1 : துணிவே துணை 64

பாடம் 2 : துணிந்து நில்; தொடர்ந்து செல் 65

பாடம் 3 : துணிந்தவருக்குத் துக்கமில்லை 66

பாடம் 4 : துணிச்சலான பெண் 67

பாடம் 5 : தடைகளைத் தகர்த்திடு 68

**திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு** 69-72

**தொகுதி 10**

நெறி 10 : நேர்மை

பாடம் 1 : நெஞ்சமுண்டு நேர்மையுண்டு 73

பாடம் 2 : நேர்மையின் முக்கியத்துவம் 74

பாடம் 3 : உயர்வும் தாழ்வும் 75

பாடம் 4 : உண்மையே உயர்வு 76

பாடம் 5 : நேர்மைச் சக்கரம் 77

**திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு** 78-80

**தொகுதி 11**

நெறி 11 : ஊக்கமுடைமை

பாடம் 1 : கெர்னல் செண்டர்ஸ் 81

பாடம் 2 : ஊக்கம் தரும் வெற்றி 82

பாடம் 3 : முயல்க! வெல்க! 83

பாடம் 4 : விடாமுயற்சி 84

பாடம் 5 : வெற்றியின் திறவுகோல் 85

**திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு** 86-89

**தொகுதி 12**

நெறி 12 : ஒத்துழைப்பு

பாடம் 1 : ஒற்றுமை வலிமையாம் 90

பாடம் 2 : ஒத்துழைத்து மகிழ்வோம் 91

பாடம் 3 : ஒன்றாய்ச் செயல்படு 92

பாடம் 4 : இணைந்த கரங்கள் 93

பாடம் 5 : என் பள்ளி என் சொர்க்கம் 94-95

**திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு** 96-98

**தொகுதி 13**

நெறி 13 : மிதமான மனப்பான்மை

பாடம் 1 : மிதமான போக்கு 99

பாடம் 2 : உடையது விளம்பேல் 100

பாடம் 3 : சிந்தித்துச் செலவிடு 101

பாடம் 4 : மிதமாகச் செயல்படுவோம்! 102

**திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு** 103-105

**தொகுதி 14**

நெறி 14 : விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை


பாடம் 1 : விட்டுக்கொடுத்தால் என்ன? 106

பாடம் 2 : விட்டுக்கொடுத்து வாழ்வோம் 107

பாடம் 3 : விட்டுக்கொடுத்த தேவதை 108-109

பாடம் 4 : ஒற்றுமை மேம்பட 110

**திடப்படுத்துதல், குறைநீக்கல், வளப்படுத்துதல், மதிப்பீடு** 111-114

# முன்னுரை

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே

தொடக்கக்கல்வி மாணவர்களிடையே உயர்நெறிப் பண்புகளை விதைக்கும் ஊன்றுகோலாக நன்னெறிப் பாடநூல் திகழ்கின்றது. இந்நூல் மாணவர்களுக்கு மட்டுமின்றி ஆசிரியர்களுக்கும் ஒரு வழிகாட்டி நூலாக அமைகின்றது. மேலும், மாணவர்களின் முழுமையான ஆற்றலை வெளிக்கொணரும் கருவியாகவும் அமைகின்றது.

நம் தேசியக் கல்வி தத்துவத்தின் குறிக்கோளானது, ஒரு மாணவனை இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல், அறிவாற்றல், ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் கொண்ட முழு மனிதனாக உருவாக்குவதே ஆகும்.

இதனைக் கருத்தில் கொண்டு, தொடக்கப் பள்ளிக்கான நன்னெறிக் கல்வித்தரம், கலைத்திட்டத்தில் அடைய வேண்டிய நோக்கங்களை முன்நிறுத்தி இந்நூல் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

மாணவர்கள் கற்றல் கற்பித்தலில் ஆர்வத்துடனும் முழு ஈடுபாட்டுடனும் இயங்க, 21ஆம் நூற்றாண்டின் பயிற்றியல் முறைகள் கையாளப்பட்டுள்ளன. ‘நானும் பள்ளியும்’ எனும் கருப்பொருளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள இப்பாடத் தொகுதிகளில் உயர்நிலைச் சிந்தனைத்திறனுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

நன்னெறிக் கல்வியின்வழி எண்ணத்திலும் மனத்திலும் விதைக்கப்படும் நற்பண்புகள் பிற்காலத்தில் நல்ல விருட்சமாக வளர்ந்து அறிவாற்றலோடு சேர்ந்த நற்பண்புகள் நிறைந்த மாணவர்களை உருவாக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

ஆசிரியர்கள்.




**கருத்துப் படிவம்**

இப்படவுரு மாணவர் கற்கப் போகும் நெறியை அறிமுகம் செய்கிறது.



**திடப்படுத்துதல்**

இப்படவுரு நன்னெறிப் பண்பைத் திடப்படுத்தும் நடவடிக்கையைக் குறிக்கிறது.



**குறைநீக்கல்**

இப்படவுரு அறவுணர்வை எளிமையாக அடைய வழிவகுக்கும் குறைநீக்கல் நடவடிக்கையைக் குறிக்கிறது.



**வளப்படுத்துதல்**

இப்படவுரு அறவுணர்வை வளப்படுத்தும் சவால் மிகுந்த நடவடிக்கையைக் குறிக்கிறது.



**மதிப்பீடு**

இப்படவுரு நெறிகளுக்குரிய கற்றல் தர எண்ணையும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளையும் அறியத் துணைபுரிகிறது.




**சிந்தனைத் திறன்**

இப்படவுரு உயர்நிலைச் சிந்தனைத் திறன் (KBAT) அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இடுபணியைக் காட்டுகிறது.



**நடவடிக்கை**

இப்படவுரு பாடம் தொடர்பான நடவடிக்கையைக் குறிக்கிறது.




**கருத்துக் கோவை**

இப்படவுரு பாடம் தொடர்பான கூடுதல் விளக்கத்தைக் குறிக்கிறது.

**வலைத்தள விளக்கக்காட்சி**

QR நோக்குக் குறியீடு

இப்படவுரு வலைத்தள விளக்கக்காட்சிகளைக் குறிக்கிறது.




21ஆம் நூற்றாண்டின் கற்றல் அணுகுமுறைகள்
https://www.cikgusuhaimincom/2017/10/47-aktiviti-pembelajaran-abad-ke-21-pak.html?m=1

# தொகுதி 1 இறை நம்பிக்கை

கருத்துப் படிவம்

## பாடம் 1 நாம் மலேசியர்




**மலேசியாவில் கொண்டாடப்படும் பண்டிகைகளைப் பட்டியலிடுக.**

ஆசிரியர் குறிப்பு 1.1

மலேசியாவில் கொண்டாடப்படும் வேறு சில பண்டிகைகளைப் பற்றி கலந்துரையாடச் செய்தல்.

**அடைவு நிலை :** 1 **வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** நாட்டுப்பற்று



கருத்துப் படிவம்

# பாடம் 2 ஒற்றுமைப் பொங்கல்





படத்தைப் பார்த்துப் பொங்கல் திருநாளின்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை விவரித்துக் கூறுக.



ஆசிரியர் குறிப்பு 1.2

பள்ளியில் கொண்டாடப்படும் வேறு சில பண்டிகைகளைப் பற்றி விளக்கச் செய்தல்.


**அடைவு நிலை** : 2 **வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்




கருத்துப் படிவம்

# பாடம் 3 மதிப்போம்; கடைப்பிடிப்போம்

ரஹ்மான் ஓய்வுவேளையின் போது சாப்பிடாமல் நூல்நிலையத்திற்குச் செல்கிறான். அதைக் கண்ட இனியனும் கதிரும் அவனை வழிமறித்துப் பேசுகின்றனர்.




1. பிற இனத்தவரின் பண்டிகைகளை ஏற்று மதிப்பதன் முக்கியத்துவத்தை ‘ஆல் ரைட் ரவுன் ரோபின்’ (All Write Round Robin) முறையில் எழுதுக.
2. பள்ளியில் பிற இனத்தவரோடு சேர்ந்து பண்டிகைகளைக் கொண்டாடும்போது ஏற்படும் மன உணர்வுகளைக் கூறுக.



ஆசிரியர் குறிப்பு 1.3 1.4 1.5

மாணவர்கள் பிற இனத்தவரின் பண்டிகைகளை மதித்து அதனை அமல்படுத்துவதற்கு வழிகாட்டியாக இருத்தல்.

அடைவு நிலை : 3/4 வி.வ.கூ: நாட்டுப்பற்று உ.சி.தி: மதிப்பிடுதல் 21ஆம் நூ.தி: நாட்டுப்பற்று




**திடப்படுத்துதல்**

## சரியான வாழ்த்து அட்டையுடன் இணைத்திடுக.

பண்டிகையின்போது எண்ணெய் தேய்த்துக் குளித்துப் புத்தாடை அணிவர்.




அனைவரும் குருதுவாராவில் கூடி பிரார்த்தனை செய்வர்.




நெல் அறுவடையை நீண்ட வீடுகளில் விழாவாகக் கொண்டாடுவர்




புத்தரின் பிறந்தநாளைக் கொண்டாட சிறப்புப் பிரார்த்தனை செய்வர்.





பெருநாளுக்குமுன் ஒரு மாத காலம் நோன்பைக் கடைப்பிடிப்பர்.




ஆசிரியர் குறிப்பு 1.3 1.4 1.5

மாணவர்களை வலைத்தள விளக்கக்காட்சியைப் பார்க்கச் செய்து மன உணர்வுகளை வெளிக்காட்டச் செய்தல்.


**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** கொள்கை உள்ளவர்.



குறைநீக்கல்

## விளையாடி மகிழ்க

பண்டிகைகளையும் அவற்றைக் கொண்டாடுபவர்களையும் இணைத்திடுக.






வளப்படுத்துதல்

## சீனப் புத்தாண்டின் நடவடிக்கைகளை நிரல்படுத்துக.

- நள்ளிரவு 12.00 மணிக்குப் பட்டாசு வெடித்தல்.
- உறவினர்கள் புத்தாண்டிற்கு முன்பே ஒன்றுகூடுதல்.
- வீட்டின் வாசலில் ஆரஞ்சுச் செடியை வைத்து அலங்கரித்தல்.
- ‘சாப் கோ மே’ (Chap Goh Meh) பண்டிகையோடு முடிவடைதல்.
- ‘அங்பாவ்’ கொடுத்தல்.

ஆசிரியர் குறிப்பு 1.1 — மேற்கண்ட பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்/பரிவுள்ளவர்



மதிப்பீடு

## மறைந்துள்ள சொற்களைக் கண்டுபிடித்திடுக.


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பௌ | த் | த | ர் | க | ள் | க | வை | த |
| க | ம் | பு | சு | ட | சி | னி | சா | ரி |
| ட | ச | கே | க் | சா | யி | தை | க் | தே |
| க | ர | ம | தா | ன் | மு | ம | கி | வா |
| ன் | பி | டெ | ன் | வ | ல் | தி | லு | ல |
| மி | பொ | ங் | க | ல் | டி | வே | ள் | ய |
| ல் | ஒ | னி | ம | ஏ | வி | ர | த | ம் |
| ஐ | க | கை | கு | ஞ | சை | பெ | மை | ச |
| ப் | ங் | வி | இ | ஸ் | லா | மி | ய | ர் |
| ப | அ | ர | செ | லு | த் | ழ | டு | ம |
| சி | ன் | ஒ | ற் | று | மை | யை | பு | ல் |



1. ______________ தை மாதம் கொண்டாப்படும்.
2. கிறிஸ்துவர்கள் ______________ சென்று வழிபடுவர்.
3. ______________ விசாக தினத்தைக் கொண்டாடுவர்.
4. ______________ சீக்கியர்களின் பண்டிகை.
5. இஸ்லாமியர்கள் ______________ மாதத்தில் நோன்பைக் கடைப்பிடிப்பர்.
6. திறந்த இல்ல உபசரிப்பு ______________ வளர்க்கும்.
7. ______________ ஐந்து வேளை தொழுவர்.
8. கிறிஸ்துவர்கள் புனித வெள்ளியை முன்னிட்டு ______________ இருப்பர்.
9. ______________ இனத்தவர் கெஅமாத்தான் பண்டிகையைக் கொண்டாடுவர்.
10. தீபாவளி ______________ மாதத்தில் கொண்டாடப்படும்.











ஆசிரியர் குறிப்பு 1.2 1.3 1.4

மேற்கண்ட பயிற்சிகளை மாணவர்களைச் செய்வித்தல்.

**வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** நாட்டுப்பற்று

தொகுதி 2 நன்மனம்

கருத்துப் படிவம்

# பாடம் 1 கை கொடுப்போம்




**சிந்தனைத் திறன்**

மேற்கண்ட சூழலில் யாரும் உதவவில்லை என்றால் என்ன நேரிடும்?

நீங்கள் பள்ளிக்குடியினருக்குச் செய்யும் வேறு உதவிகளை வகுப்பின்முன் நடித்துக் காட்டுக.

ஆசிரியர் குறிப்பு 2.1 2.2

பள்ளிக்குடியினருக்கு மாணவர்கள் உதவும் முறைகளைக் கூறப் பணித்தல்.

**அடைவு நிலை:** 2 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

கருத்துப் படிவம்

# பாடம் 2 உதவுவோம் வாரீர்




'ரோதேதிங் ரிவியு' (Rotating Review) முறையில் பள்ளிக்குடியினருக்கு உதவுவதன் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுக; எழுதுக.

ஆசிரியர் குறிப்பு 2.3 — பள்ளிக்குடியினருக்கு மாணவர்கள் முழு மனத்தோடு உதவுவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தல்.

**அடைவு நிலை:** 3 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** உதவுபவர்




**கருத்துப் படிவம்**

# பாடம் 3 மனநிறைவு




கனிமொழியும் ரஹிமாவும் நெருங்கிய தோழிகள். ரஹிமா ஏழ்மைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளின் நிலைமையை அறிந்த கனிமொழி தன் தாயாரின் அனுமதியுடன் சேமிப்புப் பணத்திலிருந்து சிறு தொகையைக் கொடுத்து பள்ளிச் சுற்றுலாக் கட்டணத்தைச் செலுத்தினாள். கனிமொழி தன் தோழிக்கு உதவியதால் மனம் குளிர்ந்தாள்.

குறள்:
காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.






1. நீங்கள் பள்ளிக்குடியினருக்கு எவ்வாறு உதவுவீர்கள் என்பதனை நடித்துக் காட்டுக.
2. நீங்கள் பள்ளிக்குடியினருக்கு உதவுவதால் ஏற்படும் மனவுணர்வுகளை வகுப்பின்முன் படைத்திடுக.



ஆசிரியர் குறிப்பு 2.4

பள்ளிக்குடியினருக்கு உதவுவதால் ஏற்படும் மனவுணர்வைக் குமிழி வரைபடத்தில் எழுதப் பணித்தல்.

**அடைவு நிலை:** 4 **வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

கருத்துப் படிவம்

# பாடம் 4 இணைந்த கைகள்




**பள்ளிக்குடியினர் இணைந்து செயல்படும் வேறு சில நடவடிக்கைகளைப் பட்டியலிடுக.**

ஆசிரியர் குறிப்பு 2.5


மாணவர்கள் பள்ளிக்குடியினருக்கு உதவுவதை உய்த்துணர்ந்து அன்றாட வாழ்வில் அமல்படுத்தக் கூறுதல்.

**அ.நி:** 5/6 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுபவர்




**திடப்படுத்துதல்**

**உங்கள் பள்ளி நண்பரின் வீடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. அவருக்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்?**











**ஆசிரியர் குறிப்பு** 2.1

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பள்ளிக்குடியினர் எவ்வாறு உதவலாம் என்பதைப் பட்டியலிட்டுக் கலந்துரையாடச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்/பரிவுள்ளவர்



குறைநீக்கல்

## படத்தைச் சரியான இணையுடன் இணைத்திடுக.















ஆசிரியர் குறிப்பு 2.2

இப்பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்து உதவும் முறைகளைக் கலந்துரையாடச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்/ பரிவுள்ளவர்



**வளப்படுத்துதல்**

**கீழ்க்காணும் சூழல்களில் நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதை எழுதுக.**

1. முதலாம் ஆண்டு பயிலும் அகிலன் பள்ளித் திடலில் விழுந்ததால் அவனுக்குக் காலில் காயம் ஏற்பட்டது.

___________________________________________

___________________________________________

___________________________________________

2. பள்ளிப் பணியாளர்கள் மேசையையும் நாற்காலிகளையும் தூக்கிச் செல்கின்றனர்.

___________________________________________

___________________________________________

___________________________________________

3. ஆசிரியர் விளையாட்டுப் பொருள்களை அடுக்கிக் கொண்டிருக்கிறார்.

___________________________________________

___________________________________________

___________________________________________

ஆசிரியர் குறிப்பு 2.5

மாணவர்கள் பள்ளிக்குடியினருக்கு உதவும் மனப்பான்மையை உய்த்துணரச் செய்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு கொள்ளும் திறன்



மதிப்பீடு

## படத்தையொட்டிய கேள்விகளுக்கு விடையளித்திடுக.




1. மேற்கண்ட படத்தில் அகிலன் என்ன செய்கிறான்?

   ______________________________

2. இச்சூழலில் அகிலன் அடைந்த மனவுணர்வு யாது?

   ______________________________

3. இச்சூழலில் நீங்கள் என்ன செய்வீர்கள்?

   ______________________________

4. பள்ளிக்குடியினருக்கு உதவுவதால் ஏற்படும் மனவுணர்வுகளைப் பட்டியலிடுக.

   i. ______________________

   ii. ______________________

   iii. ______________________



ஆசிரியர் குறிப்பு 2.3 2.4

கேள்விகளுக்கு விடையளிக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# தொகுதி 3 கடமையுணர்வு

கருத்துப் படிவம்

## பாடம் 1 என் கடமை




'பாப் கார்ன்' (Pop corn) முறையில் நீங்கள் வகுப்பறையிலும் பள்ளியிலும் மேற்கொள்ளும் கடமைகளைக் கூறுக.

ஆசிரியர் குறிப்பு 3.1 — மாணவர்கள் பள்ளியில் ஆற்றும் கடமைகளைப் பட்டியலிடக் கூறுதல்.

**அடைவு நிலை:** 1 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு கொள்ளும் திறனாளர்






கருத்துப் படிவம்

# பாடம் 2 கடமையைப் பேணுவோம்




பள்ளியில் உங்களின் பொறுப்பிற்கேற்ப நீங்கள் ஆற்றும் கடமைகளைப் பட்டியலிட்டு விளக்குக.



ஆசிரியர் குறிப்பு 3.2


பள்ளியில் மாணவர்களின் கடமைகளையும் செயலாக்க முறைகளையும் விளக்கப் பணித்தல்.

**அடைவு நிலை:** 2 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



கருத்துப் படிவம்

# பாடம் 3 பள்ளியைக் காத்திடுவோம்





## மீண்டும் பள்ளிக்குப் போகலாம்

பள்ளிக் கூடத்தில் சொன்ன பாடத்தில்
இந்த உலகத்தை நாம் அறிந்தோம்
அன்னைமடி என நம்மைத் தாங்கிய
இந்தப் பள்ளியை நாம் எப்படிக் காப்போம்?

தலைக்கு மேலே வளர்ந்தாலும் கூட
தாய்க்கு நீ பிள்ளைதான்
எத்தனை பெரிய மனிதன் ஆனாலும்
பள்ளிக்கு நீ மாணவன் தான்.

பத்து மாதம் சுமந்த தாய்க்கு
பணிவிடைகள் செய்கின்றோம்!
ஆறு வருடம் சுமந்த பள்ளிக்கு
என்ன செய்ய நினைக்கின்றோம்?



நன்றி
கவிஞர் சினேகன்

இப்பாடல் உணர்த்தும் கருத்து யாது?





**சிந்தனைத் திறன்**

உங்கள் கடமைகளை நீங்கள் முறையாகச் செய்வதால் பள்ளிக்கூடத்திற்குக் கிடைக்கும் நன்மைகள் யாவை?

ஆசிரியர் குறிப்பு 3.3

மாணவர்கள் பள்ளியில் ஆற்றும் கடமைகளை மனவோட்ட வரைபடத்தின்வழி எடுத்துரைக்கப் பணித்தல்.

**அடைவு நிலை:** 3 **வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுபவர்



திடப்படுத்துதல்

**கீழ்க்காணும் சூழல்களில் உங்களுக்கு ஏற்படும் மனவுணர்வுகளைக் குறிப்பிடுக.**



1. படியில் கிடக்கும் குப்பைகளை எடுத்துக் குப்பைத் தொட்டியில் போடுகிறீர்கள்.

உங்கள் மனவுணர்வு என்ன?

-----------------------------------------

-----------------------------------------

2. கலைந்து காணப்படும் நூலகப் புத்தகங்களை அடுக்கி வைக்கிறீர்கள்.

உங்கள் மனவுணர்வு என்ன?

-----------------------------------------

-----------------------------------------

3. பள்ளி முடிந்து ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருக்கும் மாணவர்களை ஓரிடத்தில் அமரச் சொல்கிறீர்கள்.

உங்கள் மனவுணர்வு என்ன?


-----------------------------------------

-----------------------------------------

ஆசிரியர் குறிப்பு 3.4 3.5


மாணவர்கள் தங்கள் கடமையை ஆற்றியபின் ஏற்படும் மனவுணர்வுகளைக் குறிப்பிடச் செய்தல்.

**வி.வ.கூ.:** பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுபவர்



**குறைநீக்கல்**

**பள்ளியில் ஆற்றும் கடமைகளுக்கு (✔) என அடையாளமிடுக.**





















ஆசிரியர் குறிப்பு 3.2

பள்ளியில் கடமைகளைப் பொறுப்புடன் செய்ய ஊக்குவித்தல்.
மேற்கண்ட பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



வளப்படுத்துதல்

# விளையாடுவோம் வாரீர் !




**விளையாடும் முறை:**

1. பகடையை உருட்டி கிடைக்கப்பெறும் எண்ணுக்கேற்ற சூழலை வாசித்தல்.
2. கொடுக்கப்பட்ட சூழலில் என்ன செய்வீர்கள் என்பதைக் கூறுதல்.
3. அடுத்த மாணவர்கள் விளையாட்டைத் தொடருதல்.



ஆசிரியர் குறிப்பு 3.2 3.5

மாணவர்களைக் கொடுக்கப்பட்ட சூழலுக்கேற்பத் துலங்கச் செய்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



மதிப்பீடு

## பள்ளியில் நீங்கள் ஆற்றும் கடமைகளைக் குறிப்பிடுக.





ஆசிரியர் குறிப்பு 3.5

மாணவர்கள் பள்ளியில் கடமையுணர்வுடன் செயலாற்ற ஊக்குவித்தல்.

**வி.வ.கூ.:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# தொகுதி 4 நன்றி நவில்தல்

கருத்துப் படிவம்

## பாடம் 1 நன்றி மலர்கள்




**பள்ளிக்குடியினரின் சேவைகளைப் பாராட்டும் வழிமுறைகளை நண்பர்களுடன் இணைந்து பட்டியலிடுக.**

ஆசிரியர் குறிப்பு 4.1 — பள்ளிக்குடியினரின் சேவைகளைப் பாராட்டும் முறைகளை விளக்கிக் கூறச் செய்தல்.

**அடைவு நிலை:** 1 **வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** அமல்படுத்துதல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுபவர்

கருத்துப் படிவம்

# பாடம் 2 சேவைக்குப் பாராட்டு




**சிந்தனைத் திறன்**

பள்ளிக்குடியினருக்கு ஏன் இத்தகைய நிகழ்ச்சிகளைச் செய்ய வேண்டும் என விளக்குக.

1. மேற்கண்ட சூழலில் நீங்கள் எப்படி நன்றி பாராட்டுவீர்கள்?
2. உங்கள் விடையை மெய்நிகர் கற்றல்வழி படைத்திடுக.

ஆசிரியர் குறிப்பு 4.2

பள்ளிக்குடியினருக்கு உதவுவதன் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறச் செய்தல்.

**அடைவு நிலை:** 2 **வி.வ.கூ:** தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# பாடம் 3 நன்றி மறவேல்

கருத்துப் படிவம்




**பள்ளிக்குடியினருக்கு நன்றி கூறவில்லை என்றால் ஏற்படும் விளைவுகளை எழுதுக.**

ஆசிரியர் குறிப்பு 4.3

நன்றி கூறும் பழக்கத்தை அலட்சியப்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளைத் தொடர்புபடுத்தி கூறச் செய்தல்.

**அடைவு நிலை:** 3 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மொழி **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்




பள்ளிக்குடியினருக்கு நன்றி கூறுவதால் ஏற்படும் மனவுணர்வை 'ரேலி ரோபின்' (Rally Robin) முறையில் எழுதிப் படைத்திடுக.

ஆசிரியர் குறிப்பு 4.4

மாணவர்கள் நன்றி உணர்வை வெளிப்படுத்தும்போது ஏற்படும் மனவுணர்வைச் சூழலின் வழி நடித்துக் காட்டச் செய்தல்.

**அடைவு நிலை:** 4 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

கருத்துப் படிவம்

# பாடம் 5 சேவையை மறவேன்




ஏன் அபுவின் அம்மா சிற்றுண்டிச் சாலை ஊழியருக்குப் பலகாரங்கள் கொடுத்தார்?

ஆசிரியர் குறிப்பு 4.5 — பள்ளிக்குடியினரிடம் நன்றி பாராட்டும் பண்பை அமலபடுத்த ஊக்குவித்தல்.

**அடைவு நிலை:** 5/6 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



திடப்படுத்துதல்

**தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பள்ளிப் பணியாளர்களுக்குப் பூங்கொத்து தயாரித்துக் கொடுத்திடுக.**

தேவையான பொருள்கள்:

1. பூங்கொத்து
2. வண்ண நெகிழித் தாள்
3. வண்ண நாடா (Ribbon)
4. கத்தரிக்கோல்

1


2


3


4


5


6


7


செய்து மகிழுங்கள்

ஆசிரியர் குறிப்பு 4.5

பூங்கொத்தைத் தரும்பொழுது நன்றி பாராட்டும் விதத்தை விளக்கிக் கூறுதல்.

**வி.வ.கூ:** தொழில்முனைப்பு **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வலர்




**குறைநீக்கல்**

**நன்றி நவில்தலை உணர்த்தும் இந்தக் குறுக்கெழுத்துப் பயிற்சியின் விடையைக் கண்டுபிடித்திடுக.**

## மேலிருந்து கீழ்

1. பள்ளிக்குடியினருக்கு ______________ மனநிறைவு ஏற்படும்.
2. தோட்டக்காரரின் சேவையைப் பாராட்டி ______________ தயாரித்துக் கொடுக்கலாம்.
3. நண்பன் செய்த உதவிக்கு நன்றி கூறுகையில் ______________ ஏற்படும்.




## இடமிருந்து வலம்

4. ஆசிரியர் தினத்தன்று அவர்களின் சேவையைப் பாராட்டும் வகையில் ______________ கொடுக்கலாம்.
5. உதவி செய்த நண்பனுக்கு ______________ கூற வேண்டும்.

ஆசிரியர் குறிப்பு 4.1 4.4

மேற்கண்ட நடவடிக்கையை நகல் எடுத்து மாணவர்களைச் செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



**வளப்படுத்துதல்**

**இவ்வாரம் முழுவதும் நீங்கள் எவ்வாறு பிறருக்கு நன்றி நவில்கிறீர்கள் என்பதை நாட்குறிப்பில் எழுதுக.**







**மதிப்பீடு**

**நன்றி பாராட்டும் வாக்கியத்திற்கு (😁) வரைந்திடுக.**

1. தனக்கு உணவு வழங்கிய சிவாணியாவிற்கு யுவராஜா நன்றி கூறினான்.
2. தக்க சமயத்தில் உதவி செய்த நண்பனைக் கண்டும் காணாதது போல் செல்லலாம்.
3. ஆசிரியர் தினத்தன்று அவர்களின் சேவையைப் பாராட்டி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் பூங்கொத்து வழங்கினர்.
4. பள்ளி வளாகத்தைக் சுத்தமாக வைத்துக் கொண்ட மாணவர்களுக்கு ஆசிரியர் நன்றி கூறினார்.
5. மாலா சத்துணவுத் திட்டத்திற்குத் தனது பெயரை முன்மொழிந்த ஆசிரியருக்கு நன்றி கூறினாள்.
6. தனது பணப்பையைத் தேடித் தந்த வரதனுக்கு நன்றி கூறாமல் அருந்ததி அவன்மீது வீண்பழி சுமத்தினாள்.

ஆசிரியர் குறிப்பு 4.5


நன்றி பாராட்டும் செயல்களைக் கூறச் செய்தல். மாணவர்களுக்கு நகல் எடுத்து வழங்குதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# தொகுதி 5 உயர்வெண்ணம்

கருத்துப் படிவம்

## பாடம் 1 மதித்து வாழ்வோம்




நீங்கள் பள்ளியில் வேறு எந்தச் சூழலில் பணிவாகப் பேசலாம் என்பதை ‘ஸ்பின் & திங்க்’ (Spin & Think) முறையில் உதாரணங்களுடன் கூறுக.

ஆசிரியர் குறிப்பு 5.1

மாணவர்கள் பள்ளிக்குடியினரிடம் பணிவாகப் பேசி நடந்து கொள்ளும் உதாரணங்களைப் பட்டியலிடச் செய்தல்.

**அடைவு நிலை** : 1 **வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** கொள்கை உள்ளவர்

கருத்துப் படிவம்

# பாடம் 2 நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுவோம்




நீங்கள் பள்ளியில் ஒழுக்கத்தைப் பேணாவிடில் ஏற்படும் விளைவுகளைக் குறிப்பிடுக.

**சிந்தனைத் திறன்**

5ஆவது தேசியக் கோட்பாடு வலியுறுத்தும் கருத்து என்ன?

ஆசிரியர் குறிப்பு 5.2

மாணவர்கள் பள்ளிக்குடியினரிடையே நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிப்பதன் அவசியத்தைக் கூறச் செய்தல்.

**அடைவு நிலை:** 2 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கை உள்ளவர்

# பாடம் 3 பகைமை வேண்டாம்

கருத்துப் படிவம்




மேற்கண்ட சூழலில் ஏற்படும் விளைவுகளைப் பன் செயறபாங்கு (Multi Flow Map) வரைபடத்தில் எழுதி வகுப்பில் படைத்திடுக.

ஆசிரியர் குறிப்பு 5.3

மாணவர்கள் நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணாவிடில் ஏற்படும் விளைவுகளை விவரிக்கச் செய்தல்.

**அடைவு நிலை** : 3 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** தகவல் நிறைந்தவர்



# பாடம் 4 அமல்படுத்தி மகிழ்வோம்

கருத்துப் படிவம்




உங்கள் நண்பனின் வெற்றியில் பங்கு கொள்வதனால் ஏற்படும் மன உணர்வைப் புத்தகக் குறியீடாகத் தயாரித்துக் கொடுத்திடுக.

ஆசிரியர் குறிப்பு 5.4

பள்ளிக்குடியினருடன் நன்னடத்தையோடு பழகுவதால் ஏற்படும் மன உணர்வுகளை உய்த்துணரச் செய்தல்.

**அடைவு நிலை** : 4/5 **வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



கருத்துப் படிவம்

# பாடம் 5 வாழ்த்துவோம்





**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

என்ற திருக்குறளுக்கு ஏற்ப நமது நண்பர்கள் இளம் அறிவியல் ஆய்வாளர் போட்டியில் தங்கம் வென்று வந்திருப்பது பெருமையாக உள்ளது. இவர்களின் ஈடு இணையற்ற முயற்சியும் அயராத உழைப்பும் இன்று வெற்றிக் கனியைப் பறிக்க உதவியிருக்கிறது. இவர்கள் மேலும் பல வெற்றிகள் பெற நாம் வாழ்த்துவோம்.




நீங்கள் வெற்றிபெற்ற மாணவர்களில் ஒருவராக இருந்தால், இவ்வெற்றியைப் பள்ளிக்குடியினரோடு எவ்வாறு பகிர்ந்து கொள்வீர்கள் என்பதனை விளக்குக.



ஆசிரியர் குறிப்பு 5.5

மாணவர்கள் பள்ளிக்குடியினரிடையே எவ்வாறு உயர்வெண்ணத்தை உய்த்துணர்ந்து கடைப்பிடிப்பர் என்பதனைக் கூறுதல்.

அடைவு நிலை : 6 | வி.வ.கூ: மொழி | உ.சி.தி: பயன்படுத்துதல் | 21ஆம் நூ.தி: கொள்கை உள்ளவர்




திடப்படுத்துதல்

# தற்பெருமை வேண்டாம்

சுமதி நல்ல பேச்சாற்றல் நிறைந்த மாணவி. பள்ளியைப் பிரதிநிதித்து அவள் கலந்து கொள்ளும் அனைத்துப் பேச்சுப் போட்டிகளிலும் முதல் பரிசைத் தட்டிச் செல்வாள். நல்ல பண்பினைக் கொண்டிருந்த சுமதி நாளடைவில் தற்பெருமை நிறைந்தவளாக மாறினாள். சக நண்பர்களிடத்தில் பேசுவதையும் குறைத்துக் கொண்டாள். தன் வகுப்பில் பயிலும் கடைநிலை மாணவர்களிடத்தில் பழகுவதையே நிறுத்தி விட்டாள். எப்பொழுதும் தன் பெருமையைப் பற்றியே பேச ஆரம்பித்தாள்.








வலைத்தளக் கதைக் காட்சி

ஆசிரியர் குறிப்பு 5.3

மாணவர்கள் உயர்வெண்ணத்தைக் கடைப்பிடிக்காவிடில் ஏற்படும் விளைவுகளைக் குமிழி வரைபடத்தில் எழுதப் பணித்தல்

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



**குறைநீக்கல்**

**உயர்வெண்ணத்தைக் குறிக்கும் படங்களுக்கு (✔) என அடையாளமிடுக.**





















ஆசிரியர் குறிப்பு 5.5

மேற்கண்ட நடவடிக்கையை நகல் எடுத்து மாணவர்களைச் செய்யப் பணித்தல்; உயர்வெண்ண நன்னடத்தையைச் செயல்படுத்த ஊக்குவித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்புக் கொள்ளும் திறனாளர்



வளப்படுத்துதல்

# கண்டுபிடி... கண்டுபிடி...

**சொற்குவியலில் மறைந்திருக்கும் உயர்வெண்ணத்தைக் குறிக்கும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ | பா | ரா | ட் | டு | ப | ட | செ | டு | கு | து | ம |
| ண | க | ம | வா | ழ் | த் | து | ந | றி | ய் | ழு | ரி |
| க் | ப | து | ரு | ங் | கு | ப | மி | செ | ரெ | ந் | யா |
| க | ணி | டு | ங் | மி | டே | சூ | வு | பு | சு | த | தை |
| ம் | வு | பி | க | நு | தெ | ய | ரி | ந | தி | க | மு |
| த | நி | டி | ள் | ற | த | வி | ச | ன் | அ | இ | மி |
| சி | வ | ர | வே | ற் | ற | ல் | க | றி | ச | க | ப |

**சூழலை உருவாக்குக.**

அமுதன் - திருக்குறள் போட்டி - முதல் பரிசு - மாறன் - வாழ்த்து.

________________________________________

________________________________________

ஆசிரியர் குறிப்பு 5.1: மாணவர்களை உயர்வெண்ணம் கொண்ட சொற்களைக் கண்டறிந்து எழுதச் செய்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** தகவல் நிறைந்தவர்




மதிப்பீடு


**தமிழ்நாட்டில் நடைபெற்ற மாணவர் முழக்கத்தில் முதல் பரிசை வென்ற உங்களின் நண்பருக்கு வாழ்த்து அட்டை ஒன்றனைக் கணினிவழி தயாரித்திடுக.**

**வாழ்த்து அட்டை**

**கருத்துக் கோவை**

நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்.
ஆனால்
இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்!





**உமது வெற்றி என்றும் நிலைக்கட்டும் வாழ்த்துகள்!**

**அன்புடன்,**

ஆசிரியர் குறிப்பு 5.4

வெற்றி பெற்ற நண்பனுக்கு வாழ்த்து அட்டை தயாரித்துக் கொடுப்பதனால் ஏற்படும் மனவுணர்வைக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வலர்

# தொகுதி 6 மரியாதை

கருத்துப் படிவம்

## பாடம் 1 வருக! வருக!




1. பள்ளிக்குடியினர் தொடர்பான குறிப்புகளைத் தயார் செய்து மாணவர்களிடம் வழங்குதல்.
2. ‘நான் யார்? (Who Am I?) எனும் நடவடிக்கையின் மூலம் கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு பள்ளிக்குடியினரையும் வருகையாளர்களையும் பட்டியலிடுக.

ஆசிரியர் குறிப்பு 6.1 பள்ளிக்குடியினரையும் பள்ளி வருகையாளர்களையும் பட்டியலிடப் பணித்தல்.

அடைவு நிலை : 1 | வி.வ.கூ: மொழி | உ.சி.தி: பகுத்தாய்தல் | 21ஆம் நூ.தி: தகவல் நிறைந்தவர்

கருத்துப் படிவம்

# பாடம் 2 மதித்துப் போற்றிடுக










**கருத்துக் கோவை**

அனைவரையும் நேசி; எல்லாரிடமும் மரியாதையாக நடந்து கொள்க.

**சிந்தனைத் திறன்**

பிறரிடம் பேசுகையில் மரியாதைச் சொற்களைப் பயன்படுத்திப் பேசாவிடில் என்ன நிகழும்?

1. கொடுக்கப்பட்டுள்ள சூழல்களில் மாணவர்கள் பயன்படுத்திய மரியாதைச் சொற்களைப் பட்டியலிடுக.
2. பள்ளிக்குடியினருக்கு மரியாதைச் செலுத்த வேண்டிய சூழல்களை நாடகமாக நடித்திடுக.

ஆசிரியர் குறிப்பு 6.2 6.5 — மாணவர்கள் பள்ளிக்குடியினரையும் வருகையாளர்களையும் மதிக்கும் முறையை விளக்குதல்; கடைப்பிடிக்கக் கூறுதல்.

**அடைவு நிலை** : 2/6 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுதல்

கருத்துப் படிவம்

# பாடம் 3 மதிப்பும் மரியாதையும்







1. இவ்விரண்டு சூழல்களைப் பற்றிக் கலந்துரையாடுக.
2. மரியாதை செலுத்துவதன் முக்கியத்துவத்தை ஆராய்ந்து கூறுக.

**சிந்தனைத் திறன்**

நீ குமரனாக இருந்தால் என்ன செய்வாய்?


**ஆசிரியர் குறிப்பு** 6.3

பள்ளிக்குடியினரையும் வருகையாளர்களையும் மதிப்பதன் முக்கியத்துவத்தை ஆராய்ந்து கூறுதல்.

**அடைவு நிலை** : 3 **வி.வ.கூ:** உலகளாவிய நிலைத்தன்மை **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

கருத்துப் படிவம்

# பாடம் 4 மதித்து வாழ வேண்டும்




1. நீங்கள் பிறரை மதிக்கும் சூழலைத் தெரிவு செய்க.
2. அச்சூழலில் உங்களுக்கு ஏற்படும் மனவுணர்வுகளைக் கூறுக.

ஆசிரியர் குறிப்பு 6.4

பள்ளிக்குடியினரையும் வருகையாளரையும் மதிப்பதால் ஏற்படும் மனவுணர்வுகளைக் கூறச் செய்தல்.

**அடைவு நிலை** : 4 **வி.வ.கூ:** கொள்கையுள்ளவர் **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்/ பரிவுள்ளவர்



**திடப்படுத்துதல்**

**பள்ளிக்குடியினரையும் வருகையாளர்களையும் மதிப்பதால் ஏற்படும் நன்மைகளை எழுதுக.**




| | செயல் | நன்மை |
|---|---|---|
| 1. | பள்ளிப் பணியாளரை நலம் விசாரித்தல். | |
| 2. | பள்ளி விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடத்தல். | |
| 3. | பள்ளியில் நடைபெறும் சிறுவர் தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளுதல். | |
| 4. | புதிய ஆசிரியரைக் கண்டு புன்னகை செய்தல். | |
| 5. | பள்ளிப் பாதுகாவலருக்கு வணக்கம் கூறுதல். | |
| 6. | பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவரின் உரையை அமைதியாகச் செவிமடுத்தல். | |

ஆசிரியர் குறிப்பு 6.3

நடவடிக்கைகளை உற்றறிந்து நன்மைகளை எழுதச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



குறைநீக்கல்

## மரியாதைச் சொற்களை நிரல்படுத்தி எழுதுக.

ரி தை ம யா ________

________ த் தி ம ல் த

து த செ ய் ய வு ________

________ வு ணி ப

ன் கை ன பு ________

ஆசிரியர் குறிப்பு 6.2

எழுத்துகளை நிரல்படுத்திச் சரியான மரியாதைச் சொல்லை எழுதச் செய்தல்.


**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



**வளப்படுத்துதல்**


## அ. பள்ளிக்குடியினரையும் வருகையாளரையும் மதிக்கும் செயல்களைப் பட்டியலிடுக.

1. ______________________________
2. ______________________________
3. ______________________________
4. ______________________________
5. ______________________________



## ஆ. பள்ளிக்குடியினரையும் வருகையாளரையும் மதிப்பதன் முக்கியத்துவத்தைப் பட்டியலிடுக.






ஆசிரியர் குறிப்பு 6.2 6.5

நடவடிக்கைகளை உற்றறிந்து மதிக்கும் வழிமுறைகளையும் முக்கியத்துவத்தையும் எழுதச் செய்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



மதிப்பீடு

**பள்ளிக் குடியினரையும் வருகையாளர்களையும் மதிப்பதால் ஏற்படும் மனவுணர்வுக்குக் கோடிட்டு அவர்களை மதிக்கும் முறையை எழுதிடுக.**

| சூழல் | மனவுணர்வு | மதிக்கும் வழிமுறை |
|---|---|---|
| 1. ஆசிரியர் வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார். உங்கள் நண்பன் பாடத்தைக் கவனிக்காமல் பிற நண்பனோடு பேசிக் கொண்டிருக்கிறான். | (மகிழ்ச்சி, கோபம்) | |
| 2. கட்டொழுங்கு ஆசிரியரின் வாகனத்தை நண்பன் சேதப்படுத்துகிறான். | (கோபம், பெருமிதம்) | |
| 3. தோட்டக்காரரின் பொருள்களைத் தூக்க உங்கள் தோழி உதவி செய்கிறாள். | (பெருமிதம், பொறாமை) | |
| 4. பள்ளி அடிக்கல் நாட்டு விழாவுக்குப் பெற்றோர்கள் அழைக்கப்படுகிறார்கள். | (மகிழ்ச்சி, துக்கம்) | |
| 5. தலைமை மாணவரின் கட்டளைக்கு ஏற்ப மாணவர்கள் நடந்து கொள்கிறார்கள். | (மனநிறைவு, ஏமாற்றம்) | |



ஆசிரியர் குறிப்பு 6.2 6.4

சூழலை வாசித்து ஏற்ற மனவுணர்வுக்குக் கோடிட்டுப் பதில் எழுதச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்/ பரிவுள்ளவர்

# தொகுதி 7 அன்புடைமை

கருத்துப் படிவம்

## பாடம் 1 பாசமிகு பள்ளி



1. அன்பை உணர்த்தும் படங்களுக்கு விரலை மேல் நோக்கியும் அன்பை உணர்த்தாத படங்களுக்கு விரலைக் கீழ் நோக்கியும் (Thumbs Up, Thumbs Down) காட்டுக.
2. மேற்கண்ட படங்களைக் கண்டு உங்கள் கருத்துகளைக் கூறுக.

ஆசிரியர் குறிப்பு 7.1


பள்ளிக்கும் பள்ளிக்குடியினருக்கும் அன்பு காட்டும் வழிகளை அடையாளம் கண்டு கூறுதல்.

அடைவு நிலை : 1 | **வி.வ.கூ:** சுற்றுச் சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் | **உ.சி.தி:** பகுத்தாய்தல் | **21ஆம் நூ.தி:** தொடர்புக் கொள்ளும் திறனாளர்

**கருத்துப் படிவம்**

# பாடம் 2 பொதுவுடைமை

கழுகு, நூலகப் புத்தகத்தைத் திருடுவதை ஆந்தை பார்த்து விட்டது. உடனே...




ஆந்தை ஏன் பொதுவான புத்தகம் என்று கூறியது? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.

**சிந்தனைத் திறன்**

கழுகு செய்தது சரியா? ஏன்?

**ஆசிரியர் குறிப்பு** 7.2

பள்ளியையும் பள்ளிக்குடியினரையும் நேசிப்பதன் முக்கியத்துவத்தை விளக்கப் பணித்தல்.

**அடைவு நிலை** : 2 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு. **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

கருத்துப் படிவம்

# பாடம் 3 பள்ளியின்மீது அன்பு



## என் பள்ளியே என் சொர்க்கம்

சொர்க்கம் என்பது நமக்கு
சுத்தம் உள்ள வீடுதான்
சுத்தம் என்பதை மறந்தால்
நாடும் குப்பை மேடுதான்!
உலாவும் நிலாவில் வெள்ளை அடிக்கலாம்
எங்கேயும் எப்போதும் சுத்தப்படுத்தலாம்!

குளிக்கும் அறைக்குள் கெட்ட கெட்ட வார்த்தைகள்!
படிக்கும் மனத்தில் என்ன ஆசைகள்?
இதற்கா இதற்கா கல்வி கற்கும் சாலைகள்?
எதற்கா எதற்கா இந்த வேலைகள்?
படிக்கும் படிப்பு நல்ல பண்பை ஊட்டலாம்
ஒழுங்காய் நடக்கும் பாதை காட்டலாம்!

நன்றி
கவிஞர் வாலி

நீங்கள் பள்ளியை நேசிக்காவிட்டால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிட்டு விவரித்துக் கூறுக.

**சிந்தனைத் திறன்**

இப்பாடல்வழி நீங்கள் அறிவது என்ன?

ஆசிரியர் குறிப்பு 7.3

பள்ளியையும் பள்ளிக்குடியினரையும் நேசிக்காவிடில் ஏற்படும் விளைவுகளை விளக்கப் பணித்தல்.

அடைவு நிலை : 3 | வி.வ.கூ: சுற்றுச் சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் | உ.சி.தி: பகுத்தாய்தல் | 21ஆம் நூ.தி: தொடர்புக் கொள்ளும் திறனாளர்



கருத்துப் படிவம்

# பாடம் 4 அன்பு செலுத்துவோம்



குப்பைகளை வகைப்படுத்தி மறுசுழற்சித் தொட்டிக்குள் போடுகிறேன்.

பள்ளி நிர்வாகத்தினரின் மனவுணர்வு : __________

வசதி குறைந்த என் நண்பர்களுக்கு உணவு வழங்குவேன்.

நண்பனின் மனவுணர்வு : __________



அழுது கொண்டிருக்கும் முதலாம் ஆண்டு மாணவனைத் தேற்றுகிறேன்.

முதலாம் ஆண்டு மாணவனின் மனவுணர்வு : __________

பள்ளிப் பணியாளர் தரையைத் துடைக்கும்போது ஒதுங்கி நடக்கிறேன்.

பள்ளிப் பணியாளரின் மனவுணர்வு : __________

மேற்கண்ட சூழலை வாசித்து உங்கள் மனவுணர்வுகளைக் குறிப்பிடுக.



ஆசிரியர் குறிப்பு 7.4

பள்ளிமீதும் பள்ளிக்குடியினர்மீதும் அன்பு செலுத்துவதால் ஏற்படும் மனவுணர்வை வெளிக்காட்டக் கூறுதல்.

**அடைவு நிலை** : 4 **வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** அன்பானவர் / பரிவுள்ளவர்.



திடப்படுத்துதல்

# மனமகிழ் நடவடிக்கை



| | | | |
|---|---|---|---|
| ச ம் பா | ப வு ரி | பு ன் அ | த உ வி |
| ரு ணை க | க றை க் அ | னி வு க | ம் நே ச |

விளையாடும் முறை:

1. மாணவர்கள் இணையராக விளையாடுதல்.
2. காயை நகர்த்தி கிடைக்கப்பெறும் சொல்லை நிரல்படுத்தி கூறுதல். சரியாக இருந்தால் அடுத்த கட்டத்திற்குச் செல்லுதல். தவறாக இருந்தால் பழைய கட்டத்திற்கே திரும்புதல்.
3. அதிகச் சொற்களை நிரல்படுத்திய மாணவரே வெற்றியாளர்.

ஆசிரியர் குறிப்பு 7.1

மாணவர்கள் கொடுக்கப்பட்ட சொற்களை நிரல்படுத்திக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்




# அன்பே இன்பம்









- பள்ளிப் பணியாளர்களோடு ஒன்றிணைந்து வகுப்பறைக்குச் சாயம் பூசுதல்.
- காலில் முறிவு ஏற்பட்ட நண்பனின் புத்தகப்பையைத் தூக்கிச் செல்லுதல்.
- பள்ளி விளையாட்டு அறையைத் தூய்மைப்படுத்த மாணவர்கள் உதவுதல்.
- நூலகத்தில் கலைந்து இருக்கும் புத்தகங்களை முறையாக அடுக்குதல்.

**படங்களுக்கு ஏற்ற சூழலை இணைத்திடுக.**



ஆசிரியர் குறிப்பு 7.5

மாணவர்கள் பள்ளியின்மீதும் பள்ளிக்குடியினர்மீதும் அன்பு செலுத்தும் பண்பை அமல்படுத்த ஊக்குவித்தல்.

**அடைவு நிலை** : 5/6 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** அன்பானவர் / பரிவுள்ளவர்.



**வளப்படுத்துதல்**

**பள்ளியின்மீது பள்ளிக்குடியினர்மீதும் அன்பு செலுத்துவதால் ஏற்படும் நன்மைகளை எழுதுக.**

பள்ளியின்மீதும் பள்ளிக் குடியினர்மீதும் அன்பு செலுத்துவதால் ஏற்படும் நன்மைகள்.


1. ..................................
..................................

2. ..................................
..................................

3. ..................................
..................................

4. ..................................
..................................

5. ..................................
..................................



**கருத்துக் கோவை**

அன்னை தெரெசா நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஏழை எளியோருக்குத் தொண்டாற்றியவர். இவர் 1979இல் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றுள்ளார்.



ஆசிரியர் குறிப்பு 7.2

இப்பயிற்சியை நகல் எடுத்து மாணவர்களிடம் கொடுத்துச் செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



மதிப்பீடு


## அன்பு செலுத்துவதால் ஏற்படும் நன்மைகளை எழுதுக.

1. சிற்றுண்டி வாங்க பணமில்லாத நண்பரோடு உணவைப் பகிர்ந்து உண்ணுதல்.

   நன்மை : ______________________________

2. பூச்செடிகளுக்கு நீர் ஊற்ற வாளி நிறைய நீரை எடுத்துச் செல்ல முடியாமல் தடுமாறும் தோட்டக்காரருக்கு உதவுதல்.

   நன்மை : ______________________________



3. ஆசிரியர் மேசையில் போடப்பட்ட கிழிந்த மேசை துணியை மாற்றுதல்.

   நன்மை : ______________________________

4. வீட்டுப்பாடத்தைச் செய்து முடிக்காத நண்பனுக்குப் பாடம் செய்யத் துணைபுரிதல்.

   நன்மை : ______________________________

5. கழிப்பறையின் சுவரில் கிறுக்கும் மாணவனைப் பற்றி கட்டொழுங்கு ஆசிரியரிடம் புகார் செய்தல்.

   நன்மை : ______________________________


ஆசிரியர் குறிப்பு 7.5 — அன்பு செலுத்துவதால் ஏற்படும் நன்மைகளை உய்த்துணரச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அன்பானவர் / பரிவுள்ளவர்.

# தொகுதி 8 நடுவுநிலைமை

கருத்துப் படிவம்

## பாடம் 1 சிறந்த முடிவு




செழியனின் செயல் சரியா? கருத்தைக் கூறுக.


ஆசிரியர் குறிப்பு 8.1

மாணவர்கள் பள்ளிக்குடியினரிடையே நடுவுநிலைமையுடன் நடந்து கொள்ளும் வழிகளை விவரிக்கச் செய்தல்.

**அடைவு நிலை :** 1 **வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** கொள்கை உள்ளவர்.

கருத்துப் படிவம்

# பாடம் 2 நேர்மையைக் கடைப்பிடி




**சிந்தனைத் திறன்**

தந்தையின் சொற்படி அப்பு நடந்திருந்தால், என்ன விளைவு ஏற்பட்டிருக்கும்?

1. சிற்றுண்டிச் சாலை ஊழியரின் செயல் சரியானதா? ஏன்?
2. பள்ளியில் பள்ளிக்குடியினரிடையே நடுவுநிலைமையோடு நடந்து கொள்ளும் வேறு சூழல்களைக் குழுவாக நடித்துக் காட்டுக.

ஆசிரியர் குறிப்பு 8.2

பள்ளிக்குடியினரிடையே நடுவுநிலைமையுடன் நடந்து கொள்வதன் அவசியத்தை விளக்கச் செய்தல்.

**அடைவு நிலை** : 2 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** கொள்கை உள்ளவர்



கருத்துப் படிவம்


# பாடம் 3 சரியான தீர்ப்பு





முகிலன் சிவப்பு இல்லத்தைப் பிரதிநிதித்துக் குழுப் போட்டியில் கலந்து கொண்டான். முகிலனின் குழுவில் ஒரு மாணவர் குறைந்திருந்ததால் ஆசிரியர் முகிலனை இரு முறை விளையாடச் சொன்னார். ஆனால், அதை யாரும் கவனிக்கவில்லை என்று நினைத்து அவன் ஒரு முறை மட்டுமே விளையாடி போட்டியை முடித்து விட்டான். அதைக் கண்ட ஆசிரியர்...

நடுவுநிலைமையுடன் விளையாடாததால் உன் புள்ளி குறைக்கப்பட்டுள்ளது.

**பள்ளியில் நீங்கள் நடுவுநிலைமையின்றி நடந்து கொள்வதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.**






ஆசிரியர் குறிப்பு 8.3


மாணவர்கள் பள்ளிக்குடியினரிடையே நடுவுநிலைமையின்றி நடந்து கொள்வதால் ஏற்படும் விளைவுகளை விவரிக்கச் செய்தல்.

**அடைவு நிலை** : 3 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** கொள்கை உள்ளவர்




# பாடம் 4 தவறு தவறுதான்

## கருத்துப் படிவம்




மாணவர்த் தலைவன், தன் தம்பியையும் அவனின் நண்பனையும் கட்டொழுங்கு ஆசிரியரிடம் கூட்டிச் செல்கிறான்.





நடுவுநிலைமையுடன் நடந்து கொள்வதால் ஏற்படும் மனவுணர்வை எழுதி சொல் மரத்தில் ஒட்டுக.

ஆசிரியர் குறிப்பு 8.4


மாணவர்கள் பள்ளிக்குடியினரிடையே நடுவுநிலைமையைக் கடைப்பிடிக்கையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துதல்.

**அடைவு நிலை** : 4 **வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



கருத்துப் படிவம்

# பாடம் 5 இது முறையா?






**சிந்தனைத் திறன்**

ஆசிரியரின் முடிவு சரியானதா? ஏன்?

**பள்ளியில் நீங்கள் நடுவுநிலைமையுடன் செயல்படும் சூழல்களை நடித்துக் காட்டுக.**



**ஆசிரியர் குறிப்பு 8.5**

மாணவர்கள் பள்ளிக்குடியினரிடையே நடுவுநிலைமையுடன் செயல்படும் சூழல்களை நடித்துக் காட்டத் துணைசெய்தல்.

**அடைவு நிலை** : 5 / 6 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** கொள்கை உள்ளவர்.



திடப்படுத்துதல்

**நடுவுநிலைமையான செயலா? (👍)**
**நடுவுநிலைமை அற்ற செயலா? (👎) வட்டமிடுக.**

| | செயல் | மதிப்பீடு |
|---|---|---|
| 1. | பிற மாணவனைக் கீழே தள்ளிய வகுப்புத் தலைவனை ஆசிரியர் கண்டித்தார். | 👍 👎 |
| 2. | ஆறாம் ஆண்டு மாணவன் முதலாம் வகுப்பு மாணவனைக் கனமான பொருளைத் தூக்கச் செய்தான். | 👍 👎 |
| 3. | பள்ளி ஊழியர்கள் அனைவருக்கும் வேலைகள் சமமாகப் பிரித்து வழங்கப்பட்டன. | 👍 👎 |
| 4. | பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் அனைத்து மாணவர்களுக்கும் தீபாவளி பரிசுகளை வழங்கினர். | 👍 👎 |
| 5. | கூட்டுப்பணியின்போது பள்ளிக்குடியினர் பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டனர். | 👍 👎 |
| 6. | பள்ளிப் பாதுகாவலர் தமது நண்பரின் வாகனத்தை மட்டும் பள்ளி வளாகத்தில் நிறுத்த அனுமதித்தார். | 👍 👎 |
| 7. | யாழினி தான் கொண்டு வந்த பலகாரங்களைச் சிவாவுக்கு மட்டும் கொடுத்தாள். | 👍 👎 |



ஆசிரியர் குறிப்பு 8.2

பள்ளிக்குடியினரிடையே நடுவுநிலைமையைக் கடைப்பிடிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்





**நடுவுநிலைமையைக் குறிக்கும் சொற்களைக் கண்டுபிடித்து வண்ணமிடுக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | ஈ | சா | க | ன | த | தே | வ | ள | ஏ |
| அ | பா | நி | யா | ய | ம் | ம் | ர | வே | த |
| ரி | செ | சு | ன் | லீ | ம | னி | ம் | மை | ன் |
| கோ | ப | த | ன் | ச | வ | ன் | ர | அ | ன |
| இ | கி | ல் | ரி | மா | ர | தி | வா | சு | ல |
| எ | ர் | ச | ல | பா | ரா | ப | ட் | ச | ம் |
| ஒ | ந் | னி | சு | ய | ப | ன் | ர் | ந் | கு |
| ஐ | து | கு | பா | ந் | ன் | மா | தி | ழ | ஓ |





**சூழலை வாசித்து நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கையை எழுதுக.**

1. விமலா தனது பிறந்தநாளன்று அவளுக்குப் பிடித்த நண்பர்களுக்கு மட்டும் மிட்டாய் பொட்டலத்தை வாங்கித் தந்தாள்.

   ______________________

2. விபிசன் அனைவரிடமும் சரி சமமாகப் பழகுவான்.

   ______________________

3. விண்முகில் பணக்கார நண்பர்களிடம் மட்டுமே பழகுவாள்.

   ______________________


ஆசிரியர் குறிப்பு 8.5 — பள்ளிக்குடியினரை நடுவுநிலைமையாகச் செயல்படச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தகவல் நிறைந்தவர்



**மதிப்பீடு**

**பின்வரும் சூழல்களில் நீங்கள் எவ்வாறு நடுவுநிலைமையாக நடந்து கொள்வீர்கள் என்று விவரித்திடுக.**



உன் நண்பர்கள் சண்டையிட்டுக் கொள்கிறார்கள்.

________________________________________

________________________________________

________________________________________

வகுப்புகளுக்கான போட்டியில் ஆசிரியர் உன்னை நடுவராகப் பணியாற்றச் சொல்கிறார்.

________________________________________

________________________________________

________________________________________





உன் வகுப்பில் பணிகளைப் பகிர்ந்து அளிக்கும் பொறுப்பு உனக்கு வழங்கப்படுகிறது.

________________________________________

________________________________________

________________________________________

ஆசிரியர் கேட்ட கேள்விக்குப் பதில் கூற உன் தோழி முதலில் கையை உயர்த்துகிறாள்.

________________________________________

________________________________________

________________________________________




ஆசிரியர் குறிப்பு 8.3 8.5

மாணவர்களை மேற்கண்ட பயிற்சியைச் செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** கொள்கை உள்ளவர்

# தொகுதி 9 துணிவு

கருத்துப் படிவம்

## பாடம் 1 துணிவே துணை

போட்டியில் பங்கெடுத்தல்.

சிறந்த மாணவராகப் பெயர் எடுத்தல்.

சபைகூடலில் கவிதையை ஒப்புவித்தல்.

பள்ளிக்கு நற்பெயர் ஈட்டுத் தருதல்.

செய்த தவற்றை ஏற்றுக் கொள்ளுதல்.

மேற்கண்ட கூற்றுகளை வாசித்துக் கலந்துரையாடி வேறு சில சவால்களைப் பட்டியலிடுக.

வலைத்தளப் பாடல் காட்சி

ஆசிரியர் குறிப்பு 9.1: பள்ளியில் மாணவர்களுக்கு ஏற்படும் சவால்களைப் பட்டியலிடுதல்.

அடைவு நிலை : 1 | வி.வ.கூ: மொழி | உ.சி.தி: பயன்படுத்துதல் | 21ஆம் நூ.தி: தாங்கும் வலிமை உள்ளவர், துணிவுள்ளவர்

கருத்துப் படிவம்

# பாடம் 2 துணிந்து நில்; தொடர்ந்து செல்

மலர்விழி பள்ளி இதழுக்காக யூ.பி.எஸ்.ஆர் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவியை நேர்காணல் செய்கிறாள்.




**சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவி சவால்களை எதிர்கொள்ள கையாண்ட முறைகளைப் பட்டியலிடுக.**

ஆசிரியர் குறிப்பு 9.2


பள்ளியில் காணப்படும் சவால்களைத் துணிவுடன் எதிர்கொள்ளும் வழிகளை அடையாளங்கண்டு கூறுதல்.

**அடைவு நிலை** : 2 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தாங்கும் வலிமை

கருத்துப் படிவம்

# பாடம் 3 துணிந்தவருக்குத் துக்கமில்லை

குயில் மரத்தில் அமர்ந்து பாட்டுப் பாடிக் கொண்டிருந்தது. அதன் இனிமையான கானம் அணிலின் காதுக்கு எட்டியது. பாட்டு வரும் திசையை நோக்கி அணிலின் கால்கள் சென்றன. அங்கே....





பள்ளி நடவடிக்கையில் மாணவர்கள் ஏன் துணிவுடன் பங்கெடுக்க வேண்டும் என்பதை 'சிமுல்ட்தானியோஸ் ரவுண்ட் டேபல்' (Simultaneous Round Table) முறையில் எழுதிக் கலந்துரையாடுக.

ஆசிரியர் குறிப்பு 9.3 மாணவர்கள் பள்ளியில் காணப்படும் சவால்களைத் துணிவுடன் எதிர்நோக்குவதன் முக்கியத்துவத்தை விளக்கச் செய்தல்.

**அடைவு நிலை** : 3 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தாங்கும் வலிமை

கருத்துப் படிவம்

# பாடம் 4 துணிச்சலான பெண்





**கருத்துக் கோவை**

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

மேற்கண்ட படத்தில் துணிச்சலான செயலால் அம்மாணவிக்கு ஏற்பட்டிருக்கும் மனவுணர்வைக் கலந்துரையாடுக.

ஆசிரியர் குறிப்பு 9.4

பள்ளியில் எதிர்நோக்கும் சவால்களைத் துணிச்சலுடன் எதிர்கொள்வதால் ஏற்படும் மனவுணர்வுகளை வெளிப்படுத்தக் கூறுதல்.

**அடைவு நிலை** : 4 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்



கருத்துப் படிவம்

# பாடம் 5 தடைகளைத் தகர்த்திடு





கோழிக் குஞ்சுகள் போல நீ
குறிக்கோள் கொண்டு வாழவே
நாளை நமது என்றே நீ
நடந்து செல்வாய் நண்பனே!

தடைகள் வந்த போதிலும்
தகர்த்து எறிவாய் தோழனே
துன்பம் வந்த போதிலும்
துணிந்து செல்வாய் தோழனே!

தோல்வி அடையும் போதிலும்
தொடர்ந்து செல்வாய் தோழனே
தடைகளை முறித்துக் குறைகளை
உடைத்துச் செல் தோழனே!

-நன்றி
அக்னிநேஷ்

கவிதையில் எவ்வாறு சவால்கள் எதிர்கொள்ளப்பட்டன என்பதைப் பட்டியலிட்டுக் கூறுக.

ஆசிரியர் குறிப்பு 9.5


பள்ளியில் எதிர்நோக்கும் சவால்களைத் துணிவுடன் எதிர்கொள்ள வலியுறுத்துதல்.

**அடைவு நிலை** : 5/6 **வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தாங்கும் வலிமை



திடப்படுத்துதல்

**கொடுக்கப்பட்டுள்ள சூழல்களில் எவ்வாறு துணிவுடன் செயல்படுவீர் என்பதை எழுதுக.**



பகடிவதைக்கு ஆளாகுதல்.

______________________________

______________________________



திருட்டுச் சம்பவத்தைப் பார்த்தல்.

______________________________

______________________________



சிற்றுண்டிச் சாலை ஊழியர் உங்கள் தோழனைத் திட்டுதல்.

______________________________

______________________________



முதலாம் ஆண்டு மாணவி கால் இடறி விழுந்து கிடப்பதைக் காணுதல்.

______________________________

______________________________

ஆசிரியர் குறிப்பு 9.3

மேற்கண்ட சூழலில் மாணவர்கள் எவ்வாறு துணிவுடன் செயல்படுவார்கள் என்பதை விளக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்



அடைவு நிலை : 0




குறைநீக்கல்

# விரைந்து செயல்படு




ஒரு மாணவன் சூழலை வாசிக்க, இரு போட்டியாளர்கள் விரைந்து மணியெழுப்பி துணிவான செயலா அல்லது துணிவற்ற செயலா என்பதைக் கூறுதல்.



ஆசிரியர் குறிப்பு 9.2

சூழலை வாசித்துச் சரியான செயலைக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்




வளப்படுத்துதல்

**படத்திற்கேற்ற நடவடிக்கையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

- சீலன் தன் வெற்றியை நண்பர்களுடன் கொண்டாடினான்.
- கனியமுதன் வண்ணப் பென்சிலைத் தன் நண்பனுடன் பகிர்ந்து கொண்டான்.
- சீலன் ஆசிரியரின் கட்டளையை மதித்துப் போட்டியில் பங்கெடுத்தான்.






______________________

______________________

______________________




______________________

______________________

______________________




______________________

______________________

______________________

ஆசிரியர் குறிப்பு 9.3 9.4


துணிந்து செயல்படும்போது ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்தச் செய்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



மதிப்பீடு

## படத்தைச் சரியான நடவடிக்கையுடன் இணைத்திடுக.









- பள்ளிச் சுவரில் கிறுக்கிய நாதனைக் கட்டொழுங்கு ஆசிரியர் கண்டிக்கிறார்.
- பாட வேளையில் அண்ணன் வகுப்பிற்குச் செல்லாமல் நண்பர்களுடன் அரட்டை அடிப்பதைப் பெற்றோரிடம் கூறுவேன்.
- பாட நேரத்தில் வகுப்பறையின் வெளியே கூச்சலிடும் மாணவர்களைக் கண்டித்தல்.
- பள்ளிக்கு மட்டம் போடலாம் என அழைக்கும் தோழியைப் புறக்கணித்தல்.

ஆசிரியர் குறிப்பு 9.5

சவால்களைத் துணிவுடன் எதிர்கொள்ள ஊக்குவித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்




# தொகுதி 10 நேர்மை

கருத்துப் படிவம்

## பாடம் 1 நெஞ்சமுண்டு நேர்மையுண்டு

யுவனும் தரினும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள். இருவரும் பள்ளிக்குச் சேர்ந்தே செல்வர். ஒருநாள் பள்ளிச் சிற்றுண்டிச்சாலை அருகில் அவர்கள் ஒரு பணப்பையைக் கண்டெடுத்தனர்.




பள்ளியில் வேறு எந்தச் சூழல்களில் நீங்கள் நேர்மை மனப்பான்மையைக் கடைப்பிடிக்கலாம் என்பதைப் பட்டியலிடுக.

ஆசிரியர் குறிப்பு 10.1 — மாணவர்கள் பள்ளிக்குடியினரிடையே நேர்மை மனப்பான்மையைக் குறிக்கும் உதாரணங்களைப் பட்டியலிடப் பணித்தல்.


**அடைவு நிலை :** 1 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்




கருத்துப் படிவம்

# பாடம் 2 நேர்மையின் முக்கியத்துவம்

நேர்மை காந்தியடிகளின் மனத்தில் மிகச் சிறிய வயதிலேயே விதைக்கப்பட்டிருந்தது. சிறு வயதில் தாம் பார்த்த 'அரிச்சந்திரா' நாடகம் அவரது மனத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பொய் பேசக் கூடாது, நேர்மையாக இருக்க வேண்டும் என்ற உணர்வை அந்த நாடகம் அவருக்குள் மிகவும் ஆழமாக ஊன்றச் செய்தது. "தமது வாழ்க்கையில் இழப்புகளோ அவமானமோ ஏற்பட்டிருந்தாலும் தாம் நேர்மையாக நடந்து கொண்டோம்" என்ற மகிழ்ச்சி அவருக்குள் இருந்தது.






நீங்கள் பள்ளிக்குடியினரிடம் நேர்மையுடன் நடந்து கொள்வதன் முக்கியத்துவத்தைப் பட்டியலிட்டு விளக்குக.



ஆசிரியர் குறிப்பு 10.2

பள்ளிக்குடியினரிடம் நேர்மையுடன் நடந்து கொள்வதன் முக்கியத்துவத்தை விளக்கப் பணித்தல்.

**அடைவு நிலை** : 2 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்




கருத்துப் படிவம்

# பாடம் 3 உயர்வும் தாழ்வும்

அறிவழகனும் அனித்தாவும் பள்ளி முடிந்து வகுப்பறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது ஆசிரியரின் கைத்தொலைப்பேசியை மேசையின்மேல் பார்த்தனர். அனித்தா அதை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்லலாம் எனக் கூறினாள். ஆனால், அறிவழகனோ அதனை ஆசிரியரிடமே ஒப்படைக்கலாம் எனக் கூறினான்.



ஆசிரியரின் கைத்தொலைப்பேசியை வகுப்பறையின் மேசையில் கண்டெடுத்தல்.



ஆசிரியரிடம் ஒப்படைத்தல்

விளைவு :

1. ______________________
2. ______________________
3. ______________________

வீட்டிற்கு எடுத்துச் செல்லுதல்

விளைவு :

1. ______________________
2. ______________________
3. ______________________

நீங்கள் பள்ளிக்குடியினரிடம் நேர்மையின்றி நடந்து கொள்வதால் ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து கலந்துரையாடுக.



ஆசிரியர் குறிப்பு 10.3


பள்ளிக்குடியினரிடம் நேர்மையின்றி நடந்து கொள்வதால் ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து கூறச் செய்தல்.

**அடைவு நிலை** : 3 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்



கருத்துப் படிவம்

# பாடம் 4 உண்மையே உயர்வு







பள்ளிக்குடியினரிடம் நேர்மையுடன் நடந்து கொள்வதால் உங்களுக்கு ஏற்படும் மனவுணர்வைப் புத்தகக் குறியீட்டில் எழுதி நண்பரிடம் வழங்குக.




ஆசிரியர் குறிப்பு 10.4

பள்ளிக்குடியினரிடம் நேர்மை உணர்வோடு நடந்து கொள்வதால் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்தக் கூறுதல்.

**அடைவு நிலை** : 4 **வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** கொள்கையாளர்

கருத்துப் படிவம்

# பாடம் 5 நேர்மைச் சக்கரம்




1. இந்த நேர்மைச் சக்கரத்தைத் தயாரித்துச் சுழற்றுக.
2. கிடைக்கப்பெற்ற சூழலை வாசித்து நீங்கள் எப்படி நேர்மை மனப்பான்மையை அமல்படுத்தலாம் என்பதைக் கூறுக.

ஆசிரியர் குறிப்பு 10.5 — பள்ளிக்குடியினரிடம் நேர்மை மனப்பான்மையை எவ்வாறு அமல்படுத்தலாம் என்பதை விளக்கப் பணித்தல்.

**அடைவு நிலை** : 5/6 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்



திடப்படுத்துதல்

**மாணவர் தலைவராகிய நீங்கள் பள்ளியில் கடைப்பிடிக்க வேண்டிய நேர்மை மனப்பான்மையைக் காட்டும் செயல்களை எழுதுக.**

### வகுப்பறை

1. ______________________________





### நூல்நிலையம்

1. ______________________________

### அறிவியல் அறை

1. ______________________________





### சபைகூடல்

1. ______________________________


### சிற்றுண்டிச் சாலை

1. ______________________________



ஆசிரியர் குறிப்பு 10.1 — நேர்மைப் பண்புகளைப் பட்டியலிடச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



**குறைநீக்கல்**

**நேர்மையான செயலைக் குறிக்கும் சூழலுக்கு (✔) என அடையாளமிடுக.**

1. கார்த்திகேயன், கீழே கண்டெடுத்த பணத்தைப் பொறுப்பாசிரியரிடம் கொடுக்கிறான். ☐
2. பள்ளிக்குத் தாமதமாக வந்த டேவிட், கட்டொழுங்கு ஆசிரியரைக் கண்டதும் தூணுக்குப் பின்னால் மறைந்து நின்றான். ☐
3. பாண்டியன் தன் நண்பனின் புத்தகத்தை மறைத்து வைத்துவிட்டு, தான் பார்க்கவில்லை என்று கூறினான். ☐
4. முத்து ஆசிரியரிடம் தான் தவறுதலாகப் பூச்சாடியை உடைத்துவிட்டதை ஒப்புக்கொண்டான். ☐



**வளப்படுத்துதல்**

**அமுதன் வேறு பள்ளியிலிருந்து மாற்றலாகி வந்த மாணவன். உன் வகுப்புத் தோழனும் உன் அண்ணனும் அவனைக் கேலி செய்து அழ வைக்கின்றனர். வகுப்புத் தலைவன் என்ற முறையில் என்ன செய்வாய் என்பதைப் பட்டியலிடுக.**

1. ____________________
2. ____________________
3. ____________________

ஆசிரியர் குறிப்பு 10.5 — நேர்மையான சூழலைத் தேர்ந்தெடுத்து எழுதவித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



மதிப்பீடு

**சூழலுக்கேற்ற நேர்மை நடவடிக்கையை எழுதுக.**





1. உங்கள் தோழி சோதனையின்போது கேள்விக்கான பதிலை உங்களிடம் கேட்கிறாள். நீங்கள் என்ன செய்வீர்கள்?

   ______________________________

2. ஏழை மாணவர்களுக்காகத் திரட்டிய பணத்திலிருந்து உன் தோழி சிறு தொகையை எடுத்து உணவு வாங்குகிறாள். நீங்கள் என்ன செய்வீர்கள்?

   ______________________________

3. உங்கள் அக்காள் பள்ளிக்கு மட்டம் போட எண்ணுகிறார். தம் வகுப்பாசிரியரிடம் உடல் நலம் சரியில்லை என உங்களைக் கூறச் சொல்கிறார். நீங்கள் என்ன செய்வீர்கள்?

   ______________________________

4. பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் நன்கொடையை அண்ணன் விளையாட்டுப் பொருள்கள் வாங்கிச் செலவழித்துவிட்டார். நீங்கள் என்ன செய்வீர்கள்?

   ______________________________

5. உன் நண்பன் ஆசிரியர் கொடுத்த வீட்டுப்பாடத்தைச் செய்யாமல் புத்தகத்தை மறைத்து வைத்துவிட்டு ஆசிரியரிடம் புத்தகம் தொலைந்து விட்டதாகக் கூறுகிறான். நீங்கள் என்ன செய்வீர்கள்?

   ______________________________

ஆசிரியர் குறிப்பு 10.5

சூழலுக்கேற்ப நேர்மை மனப்பான்மையுடன் செயல்பட ஊக்குவித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

தொகுதி 11 ஊக்கமுடைமை

கருத்துப் படிவம்

# பாடம் 1 கெர்னல் செண்டர்ஸ்



1890ஆம் ஆண்டில் அமெரிக்காவில் உள்ள கென்தக்கி எனும் நகரில் பிறந்தார். வீட்டில் மூத்த பிள்ளையான இவர், தமது 13வது வயதில் வேலை செய்ய ஆரம்பித்தார். தமது வாலிப வயதில் அமெரிக்க இராணுவத்தில் இணைந்து நாட்டுக்காகச் சேவையாற்றியவர்.

பல வேலைகளைச் செய்து கொண்டே பட்டப் படிப்பையும் மேற்கொண்டார். தம்மிடம் இருந்த சேமிப்பை மூலதனமாகக் கொண்டு ஒரு வியாபாரத்தைத் தொடங்கினார். அவ்வியாபாரம் தோல்வியில் முடியவே அவர் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டார்.

அனைத்தையும் இழந்து நின்ற நிலையிலும் ஊக்கத்தை மூலாதாரமாகக் கொண்டு உணவகத்தில் பணிபுரியத் தொடங்கினார். தமக்கே உரிய சமையல் சூத்திரத்தைப் பயன்படுத்தி பொரித்தக் கோழித் துண்டுகளை விற்றார். அவை மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. 1964ஆம் வருடத்தில் அமெரிக்கா முழுவதிலும் இவரின் பெயரில் 600 உணவகங்கள் உருவாகின. தற்போது உலகில் உள்ள 80 நாடுகளில் இந்த உணவகங்கள் இயங்கி வருகின்றன. வயது முதிர்ந்து போனாலும் விடாமுயற்சியும் ஊக்க மனப்பான்மையும் இருந்தால் யாரும் எதையும் சாதிக்கலாம் என்பதற்கு இவரே சான்று. 1980இல் இவ்வுலகைவிட்டு மறைந்தாலும் அவர் கண்டுபிடித்த உணவின்வழி மக்கள் மனத்தில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்.

**கருத்துக் கோவை**

முயலும் வெல்லும்;
ஆமையும் வெல்லும்;
முயலாமை வெல்லாது.

1. கெர்னல் செண்டர்ஸ் பற்றி உங்கள் கருத்து என்ன?
2. பள்ளியில் நீங்கள் ஊக்கத்துடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பட்டியலிடுக.

ஆசிரியர் குறிப்பு 11.1 ஊக்கம் தரும் செயல்களைக் கூறச் செய்தல்.

**அடைவு நிலை** : 1 **வி.வ.கூ:** சுற்றுச் சூழல் நிலைதன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



கருத்துப் படிவம்

# பாடம் 2 ஊக்கம் தரும் வெற்றி




உதயா ஓரளவு நன்றாக ஓடக்கூடியவன். ஊக்கத்தைக் கைவிடாமல் தொடர்ந்து பயிற்சிகள் செய்து வந்தான். இன்று மாவட்ட ரீதியில் நடந்த ஓட்டப்பந்தயத்தில் முதல் நிலையில் வெற்றி பெற்றான்; பள்ளிக்குப் பெருமை சேர்த்தான்.

**பின்தங்கிய மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறுவதற்கான வழிகளை 'ரேலி ரோபின்' (Rally Robin) முறையில் கலந்துரையாடிக் கூறுக.**



ஆசிரியர் குறிப்பு 11.2

பள்ளியில் ஊக்கமுடைமையோடு செயல்படுவதன் முக்கியத்துவத்தை விளக்கப் பணித்தல்.

**அடைவு நிலை** : 2 **வி.வ.கூ:** தொழில்முனைப்பு நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** தாங்கும் வலிமை

கருத்துப் படிவம்

# பாடம் 3 முயல்க! வெல்க!




இவர்களின் வெற்றிக்குக் காரணமென்ன?



நீங்கள் ஊக்கத்தைக் கைவிட்டால் என்ன நடக்கும் என்பதனைப் பட்டியலிடுக.

ஆசிரியர் குறிப்பு 11.3

மாணவர்கள் ஊக்கமின்றிச் செயல்படுவதால் ஏற்படும் விளைவுகளைக் கூறச் செய்தல்.

**அடைவு நிலை** : 2 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தாங்கும் வலிமை



கருத்துப் படிவம்

# பாடம் 4 விடாமுயற்சி




சின்னஞ்சிறு இதயம்
அதில் சிறகடிக்கும் கனவுகள்!
அத்தனையும் நிறைவேறும்!
உறுதியுடன் கூடிய விடாமுயற்சி இருந்தால்....!
வேதனைகளும் சாதனைகளாய் மாறும்
விடாமுயற்சி என்னும் விதை இருந்தால்.....!


விழுவது இருமுறை ஆனாலும்
எழுவது மும்முறையாகட்டும்....!
பலமுறை விழுந்தால்தான்
மழைத்துளியும் ஆறாகும்...!
ஒருவரின் ஆயிரமாவது முயற்சிதான்
உலகின் இருளை வெளிச்சமாக்கியது!

விதைக்குள்ளே இருந்துவிட்டால்
வெளியேறாது ஆலமரம்!
உனக்குள்ளே இருந்துவிட்டால்
வீணாகும் உந்தன் திறம்!
திடமான முடிவெடு!
திறமையுடன் முன்னேறு!
கடின உழைப்பைக் காணிக்கையாக்கு
வருங்காலம் உன்னோடு!
வசந்தகாலம் உன் வாழ்க்கையோடு.

நன்றி
கவிஞர் வெங்கடேஸ்குமார்



குழுவில் கவிதையை ஒப்புவித்து, ஊக்கத்துடன் செயல்படுவதால் ஏற்படும் மனவுணர்வுகளைப் பட்டியலிடுக.



ஆசிரியர் குறிப்பு 11.4


மாணவர்கள் ஊக்கமுடைமையைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் மனவுணர்வுகளைக் கூறப் பணித்தல்.

**அடைவு நிலை** : 4/5 **வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** அறியும் ஆர்வம்




கருத்துப் படிவம்

# பாடம் 5 வெற்றியின் திறவுகோல்




**மேற்கண்ட உரையாடலின் மூலம் மாணவர்கள் அடையும் நன்மைகளைக் குறிப்பிடுக.**



ஆசிரியர் குறிப்பு 11.5 — மாணவர்கள் பள்ளியில் ஊக்கத்தோடு செயல்படச் செய்தல்.

**அடைவு நிலை** : 5/6 **வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** தாங்கும் வலிமை



திடப்படுத்துதல்

## மறைந்துள்ள சொற்களைக் கண்டுபிடித்திடுக.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | பெ | ரு | மை | மி | பா |
| மு | ய | ற் | சி | ழ் | ஊ |
| வ | து | ய | றே | கி | க் |
| டு | சா | த | னை | மு | க |
| உ | ழை | ப் | பு | ல் | ம் |
| ய | எ | ய் | றி | ரு | டு |
| ர் | த் | வெ | ற் | றி | ங் |
| வு | தி | ற | மை | கை | போ |




ஆசிரியர் குறிப்பு 11.3

பள்ளியில் ஊக்கமுடைமை மனப்பான்மையைக் கடைப்பிடிக்காவிடில் ஏற்படும் விளைவுகளை விவரிக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

குறைநீக்கல்

# உருட்டி விளையாடு




ஊக்கமுடைமையால் ஏற்படும் நன்மைகளைக் கண்டறிந்து பந்தை உருட்டி கலனைச் சாய்த்திடுக.

ஆசிரியர் குறிப்பு 11.4

ஊக்கமுடைமையைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் மனவுணர்வைக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு கொள்ளும் திறன்

வளப்படுத்துதல்

**ஊக்கமுடைமையை உணர்த்தும் பொருத்தமான செய்யுள்களை எழுதுக.**

**ஆத்திசூடி**

______________________________

______________________________

**கொன்றை வேந்தன்**

______________________________

______________________________

**திருக்குறள்**

______________________________

______________________________

______________________________

______________________________


ஆசிரியர் குறிப்பு 11.2

மாணவர்கள் ஊக்கமுடைமையைக் குறிக்கும் செய்யுள்களைத் தேடத் துணைசெய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** தாங்கும் வலிமை

**மதிப்பீடு**

**ஊக்கமுடைமையைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகளைத் தெரிவு செய்து எழுதுக.**




- வாழ்வில் வெற்றி அடையலாம்.
- அனைவரும் நம்மை மதிக்க வாழலாம்.
- தாழ்வு மனப்பான்மையோடு வாழலாம்.
- நமது குறிக்கோளை அடையலாம்.
- நமக்குச் சோர்வு ஏற்படலாம்.
- விடாமுயற்சியுடனும் முழுமனத்துடனும் செயல்படலாம்.
- நம் மனத்தில் தாழ்வு மனப்பான்மை நீங்கலாம்.

ஆசிரியர் குறிப்பு 11.5

மேற்கண்ட நடவடிக்கையை நகல் எடுத்து மாணவர்களைச் செய்வித்தல்.

**வி.வ.கூ.:** மொழி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** கொள்கையுள்ளவர்

# தொகுதி 12 ஒத்துழைப்பு

கருத்துப் படிவம்

## பாடம் 1 ஒற்றுமை வலிமையாம்




நீங்கள் பள்ளிக்குடியினரோடு ஒத்துழைத்து மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை வட்ட வரைபடத்தில் எழுதுக.

ஆசிரியர் குறிப்பு 12.1

பள்ளிக்குடியினரோடு ஒத்துழைத்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைப் பட்டியலிடச் செய்தல்.

**அடைவு நிலை** : 1 **வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# பாடம் 2 ஒத்துழைத்து மகிழ்வோம்

கருத்துப் படிவம்




1. சீலாவைப் பற்றி உங்கள் கருத்து என்ன?
2. பள்ளியில் நடைபெறும் நடவடிக்கைகளுக்கு நீங்கள் எவ்வாறு ஒத்துழைப்பு நல்குவீர்கள்?

**ஆசிரியர் குறிப்பு** 12.2

பள்ளியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைப் பள்ளிக்குடியினருடன் ஒன்றிணைந்து செயல்படுத்தும் முறைகளைக் கூறப் பணித்தல்.

**அடைவு நிலை** : 2 **வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** குழுவாகச் செயல்படுதல்

கருத்துப் படிவம்

# பாடம் 3 ஒன்றாய்ச் செயல்படு




1. மேற்கண்ட சூழலில் ஒன்றிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை விளக்குக.
2. ஒன்றிணைந்து செயல்படாமல் இருந்தால் எம்மாதிரியான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதனை நாடகத்தின்வழி நடித்திடுக.

ஆசிரியர் குறிப்பு 12.3 — பள்ளிக்குடியினரிடம் ஒன்றிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறச் செய்தல்.

**அடைவு நிலை** : 3 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

கருத்துப் படிவம்

# பாடம் 4 இணைந்த கரங்கள்



1. மேற்கண்ட சூழலில் சாரணர்கள் இணைந்து செயல்படும் நடவடிக்கைகளைக் கலந்துரையாடுக.
2. மேற்கண்ட சூழலில் நீங்கள் பள்ளிக்குடியினருடன் ஒத்துழைத்துச் செயல்படுவதால் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்துக.

ஆசிரியர் குறிப்பு 12.4

பள்ளிக்குடியினருடன் ஒத்துழைத்துச் செயல்படுவதால் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்தச் செய்தல்.

**அடைவு நிலை** : 4 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



கருத்துப் படிவம்

# பாடம் 5 என் பள்ளி என் சொர்க்கம்

பவித்ரா : நம் பள்ளி ஊழியரைப் பார்த்தால் பரிதாபமாக உள்ளது.

பிருந்தா : ஏன்? அவருக்கு என்னவாயிற்று?

பவித்ரா : நம் பள்ளியைத் தூய்மைப்படுத்தி குப்பைகளைச் சேகரித்து, அவற்றை வகைக்கேற்பப் பிரித்தெடுத்துக் குப்பைப் பைகளில் போடுவது சிரமம்தானே!

பிருந்தா : அவருக்கு நாம் எவ்வாறு உதவலாம்?

ஒரு வாரத்திற்குப் பிறகு....

ஆசிரியர் குறிப்பு 12.5 பள்ளிக்குடியினருடன் ஒத்துழைக்கும் பண்பை அமல்படுத்தப் பணித்தல்.

**அடைவு நிலை** : 5/6 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்




வேறு எந்த வழிகளில் நீங்கள் பள்ளிக் குடியினருக்கு ஒத்துழைப்பு நல்குவீர்கள் என்பதைக் கூறுக.



திடப்படுத்துதல்

**பின்வரும் சிக்கலைத் தீர்க்க பள்ளிக்குடியினருடன் இணைந்து செயல் திட்டம் ஒன்றனைத் தயாரித்திடுக.**

| சிக்கல் |
|---|
| உன் பள்ளிக்கூடம் தூய்மையின்றி இருந்ததால் ஏடிஸ் கொசு பரவியது. அதனால் உன் வகுப்பு மாணவிக்கு டிங்கிக் காய்ச்சல் ஏற்பட்டது. |

| தீர்வுக்கான திட்டம் |
|---|
| ______________________ |
| ______________________ |
| ______________________ |
| ______________________ |



| விளைவு |
|---|
| ______________________ |
| ______________________ |
| ______________________ |
| ______________________ |

| முடிவு |
|---|
| ______________________ |
| ______________________ |
| ______________________ |
| ______________________ |

**அறிந்து கொள்க!**

**டிங்கிக் காய்ச்சலின் அறிகுறிகள்.**

1. குளிர்க்காய்ச்சல்
2. தலைவலி
3. இரத்த அழுத்தமும் நாடித்துடிப்பும் குறையும்
4. கண்கள் சிவந்து காணப்படும்
5. சருமத்தில் சிவப்புப் புள்ளிகள்

ஆசிரியர் குறிப்பு 12.2


பள்ளிக்குடியினருடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் செயல்முறைகளைக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



**குறைநீக்கல்**

**பள்ளிக்குடியினருடன் ஒத்துழைத்துச் செயல்படுவதால் ஏற்படும் மனவுணர்வுகளுக்கு**  **என வரைக.**






**வளப்படுத்துதல்**

**சூழலை வாசித்து அதற்கேற்ற நடவடிக்கைகளை எழுதுக.**

பள்ளியில் ஆசிரியர் தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டுப் பள்ளிக்குடியினருடன் ஒன்றிணைந்து அந்நிகழ்ச்சியை எவ்வாறு ஏற்பாடு செய்வீர்கள் என்பதை எழுதுக.

1. ______________________________
2. ______________________________
3. ______________________________



ஆசிரியர் குறிப்பு 12.4 12.5

பள்ளிக்குடியினருடன் ஒத்துழைக்கையில் ஏற்படும் மனவுணர்வை வெளிப்படுத்தச் செய்தல்; ஒத்துழைக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்



மதிப்பீடு

**படங்களில் காணப்படும் நடவடிக்கைகளால் ஏற்படும் நன்மைகளை எழுதுக.**


1. 

நடவடிக்கை : ____________________

____________________

நன்மை : ____________________

____________________

2. 

நடவடிக்கை : ____________________

____________________

நன்மை : ____________________

____________________

3. 

நடவடிக்கை : ____________________

____________________

நன்மை : ____________________

____________________

4. 


நடவடிக்கை : ____________________

____________________

நன்மை : ____________________

____________________

ஆசிரியர் குறிப்பு 12.3

பள்ளிக்குடியினருடன் ஒத்துழைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை விவரிக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** கொள்கையாளர்

# தொகுதி 13

# மிதமான மனப்பான்மை

கருத்துப் படிவம்

## பாடம் 1 மிதமான போக்கு

பள்ளி ஓய்வு வேளையில் மூன்று விவேகம் மாணவர்கள் நாடகப் பயிற்சியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.




1. மேற்கண்ட சூழலை உங்கள் நண்பருடன் நடித்துக் காட்டுக.
2. இச்சூழல்களைத் தவிர்த்து நீங்கள் வேறு எவ்வகையில் மிதமான போக்கைக் கடைப்பிடிக்கலாம் என்பதைப் பட்டியலிடுக.

ஆசிரியர் குறிப்பு 13.1

மாணவர்கள் பள்ளியில் கடைப்பிடிக்கும் மிதமான போக்கைப் பட்டியலிடச் செய்தல்.

**அடைவு நிலை** : 1 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# பாடம் 2 உடையது விளம்பேல்

கருத்துப் படிவம்




**கருத்துக் கோவை**

அளவாய்ப் பேசுக
நிறைவாய்ப் பேசுக
அறிவாய்ச் செயல்படுக.

1. மலரைப் பற்றிய உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.
2. ஏன் நாம் பிறருடன் பேசும்போது மிதமான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்? விளக்குக.

ஆசிரியர் குறிப்பு 13.2 மாணவர்கள் பள்ளியில் எவ்வாறு மிதமான போக்கைக் கடைப்பிடிக்கலாம் என்பதைக் கூறச் செய்தல்.

**அடைவு நிலை** : 2 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தகவல் நிறைந்தவர்



கருத்துப் படிவம்

# பாடம் 3 சிந்தித்துச் செலவிடு



பள்ளிக்குடியினரே, உங்கள் அனைவருக்கும் என் வணக்கம். இன்று உங்களிடம் மிதமான போக்கு குறித்துப் பேச வந்துள்ளேன். சிந்தனையிலும் பேச்சிலும் செயலிலும் மிதமாக நடந்து கொள்வதையே மிதமான போக்கு என்கின்றோம். நமது செயல்களில் மிதமான போக்கைக் கடைப்பிடிப்பது மிக அவசியமாகும். நாம் செய்யும் செலவை முதலில் திட்டமிட வேண்டும்.



நாம் அளவிற்கு அதிகமாகச் செலவு செய்வதையும் ஆடம்பரத்திற்காக தகுதிக்குமீறி பொருள்களை வாங்குவதையும் தவிர்க்க வேண்டும். மிதமான மனப்போக்கைக் கொண்ட ஒருவர் மின்சாரத்தையும் நீரையும் விரயம் செய்யாமல் பயன்படுத்துவார். அத்தோடு, அவர் எதிர்காலத்திற்காகப் பணத்தைச் சேமித்து வைக்கும் பழக்கத்தையும் பெற்றிருப்பார். மிதமான மனப்போக்கைக் கடைப்பிடித்துச் சிக்கனத்தை விரும்பும் நற்குடிகளாக உருவாகலாம் வாரீர்.

1. நீங்கள் எவ்வாறு பணத்தைச் சேமிக்கலாம் என்பதைப் பட்டியலிட்டுக் கூறுக.
2. சேமிப்பின் அவசியத்தை வட்ட வரைபடத்தில் எழுதுக.



ஆசிரியர் குறிப்பு 13.3 — பள்ளியில் மிதமான போக்கைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகளை விளக்கச் செய்தல்.

**அடைவு நிலை** : 3 **வி.வ.கூ:** நிதிக் கல்வி **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# பாடம் 4 மிதமாகச் செயல்படுவோம்!

கருத்துப் படிவம்

ஓய்வு மணி ஒலித்தது. வருணனும் சரணியாவும் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றனர். வருணனின் தாயார் வருணனுக்குக் காலை உணவு தயாரித்துக் கொடுத்தனுப்பியிருந்தார். இருப்பினும், அதை உண்ணாமல் சிற்றுண்டிச்சாலையில் உணவை வாங்க முற்பட்டான்.




**சிந்தனைத் திறன்**

நீங்கள் வேறு எந்தச் சூழல்களில் மிதமான போக்கைக் கடைப்பிடிப்பீர்கள்? ஏன்?

1. மிதமான போக்கைக் கடைப்பிடிப்பதால் உங்களுக்கு ஏற்படும் மனவுணர்வைக் குறிப்பிடுக.
2. மிதமான போக்கைக் கடைப்பிடிக்காதவரின் நிலை எப்படி இருக்கும்?

ஆசிரியர் குறிப்பு 13.4 13.5

மாணவர்கள் பள்ளியில் மிதமான போக்கைக் கடைப்பிடிக்கச் செய்தல்; அதனால் ஏற்படும் மனவுணர்வுகளைக் குறிப்பிடச் செய்தல்.

**அடைவு நிலை** : 4/5/6 **வி.வ.கூ:** நிதிக் கல்வி **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

**திடப்படுத்துதல்**


**பள்ளிக்குடியினர் மேற்கொள்ளும் மிதமான மனப்போக்குச் செயல்களைப் பட்டியலிடுக.**

______________________________

______________________________


______________________________

**குறைநீக்கல்**

1


2


3


4


**படங்களைத் துணையாகக் கொண்டு மிதமான செயல், மிதமற்ற செயல் எனக் குறிப்பிடுக.**

ஆசிரியர் குறிப்பு 13.1: படத்தைப் பார்த்து மிதமான செயல் அல்லது மிதமற்ற செயல் எனக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

வளப்படுத்துதல்

## கூற்றுகளை வாசித்து வகைப்படுத்துக.

❖ பகலில் வகுப்பு மின் விளக்கு எரிகின்றது.
❖ கீதா உணவை மீதம் வைக்காமல் உண்டாள்.
❖ சற்குணன் தனது புதிய வீட்டைப் பற்றி தற்பெருமையாகப் பேசினான்.
❖ மதியழகன் தேவைக்கேற்ற செலவு செய்வான்.
❖ முரளி கிடைத்த பணத்தை வீணே நண்பர்களுக்கு உணவு வாங்கிக் கொடுத்துச் செலவழிக்கிறான்.
❖ பார்கவி ஆரவாரமின்றி அனைவரிடமும் பணிவாகப் பேசுவாள்.
❖ இளமதி தனது பிறந்தநாளை எளிமையாகக் கொண்டாடினாள்.
❖ ஆசிரியர் தினம் ஆடம்பரமின்றிக் கொண்டாடப்பட்டது.

| மிதமான மனப்போக்கு | மிதமற்ற மனப்போக்கு |
|---|---|
| 1. ______________________ | 1. ______________________ |
| 2. ______________________ | 2. ______________________ |
| 3. ______________________ | 3. ______________________ |
| 4. ______________________ | 4. ______________________ |

ஆசிரியர் குறிப்பு 13.5 பள்ளியில் மிதமான மனப்போக்கைக் கடைப்பிடிக்க வலியுறுத்துதல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு   உ.சி.தி: பகுத்தாய்தல்   21ஆம் நூ.தி: சிந்தனையாளர்

மதிப்பீடு

**கீழ்க்காணும் சூழல்களில் நீங்கள் என்ன செய்வீர்கள் என்று எழுதுக.**

1. பள்ளியில் உங்கள் நண்பன் பிறந்த நாளன்று உங்களுக்கு விலையுயர்ந்த பரிசை வழங்கப் போவதாகக் கூறுகிறான்.

_______________________________________________

2. சபைகூடலில் தலைமையாசிரியர் உரையாற்றும்போது உங்கள் வகுப்புத் தலைவி பேசிக் கொண்டிருக்கிறாள்.

_______________________________________________

3. சிற்றுண்டிச் சாலையில் உங்கள் தம்பி அதிகச் செலவு செய்கிறான்.

_______________________________________________

4. ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மணிமாறனிடம் உங்கள் நண்பன் தனது பிறந்தநாள் கொண்டாட்டத்தைப் பற்றி தற்பெருமையாகக் கூறுகிறான்.

_______________________________________________

5. உங்கள் வகுப்பு மாணவர்கள் கணினியறையைப் பயன்படுத்திய பிறகு மின் விளக்கையும் குளிரூட்டியையும் முடக்காமல் சென்று விட்டனர்.

_______________________________________________


ஆசிரியர் குறிப்பு 13.2 — பள்ளியில் மிதமான மனப்போக்கைக் கடைப்பிடிக்கும் முறைகளை விளக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

# தொகுதி 14 விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை

கருத்துப் படிவம்

## பாடம் 1 விட்டுக்கொடுத்தால் என்ன?



ஒரு காட்டின் நடுவில் ஆறு ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றின்மேல் ஒரு குறுகிய பாலம் மட்டுமே இருந்தது. காட்டில் இருந்த விலங்குகள் இந்தப்பாலத்தைப்பயன்படுத்தி ஆற்றைக் கடந்தன.

ஒரு நாள், இரண்டு நரிகள் ஆற்றைக் கடக்கும்போது எதிரும் புதிருமாக நின்று ஒன்று மற்றதை வழிவிடச் சொன்னது. இரண்டு நரிகளுமே ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்காமல் சண்டை இட்டன. இரண்டு நரிகளும் ஆற்றில் விழுந்து மடிந்தன.

இவற்றை இரு கரைகளிலும் இருந்த ஆடுகள் பார்த்தன. ஆதலால், ஓர் ஆடு குரல் கொடுத்து மற்ற முனையிலிருந்த ஆட்டை முதலில் கடந்து வரச் செய்தது. பின்னர் குரல் கொடுத்த ஆடு அடுத்த முனைக்குக் கடந்து சென்றது.

விட்டுக்கொடுக்கும் தன்மை இல்லாததால் நரிகள் உயிர்விட்டன. ஆனால், விட்டுக்கொடுக்கும் தன்மை கொண்ட ஆடுகள் உயிர் பிழைத்தன.

**மேற்கண்ட கதையில் காணப்படும் விட்டுக்கொடுக்கும் தன்மையைப் பற்றி உங்களுடைய கருத்துகளைக் கூறுக.**

ஆசிரியர் குறிப்பு 14.1

விட்டுக்கொடுக்கும் தன்மைகளான சகிப்புத்தன்மை, பொறுமை போன்றவற்றைக் குறித்துக் கலந்துரையாடச் செய்தல்.

**அடைவு நிலை :** 1 **வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்/ பரிவுள்ளவர்





கருத்துப் படிவம்

# பாடம் 2 விட்டுக்கொடுத்து வாழ்வோம்

**சூழல் 1** : மூன்றாம் ஆண்டு மாணவர்கள் சிற்றுண்டிச் சாலையில் உணவு வாங்குகின்றனர். அப்பொழுது முதலாம் ஆண்டு மாணவர்கள் அங்கே வருகின்றனர்.



சீதா : வா, நாம் உணவை வாங்குவோம்.



சுசிலா : நாம் முதலில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு உணவு வாங்க வழி விடுவோம்.

**சூழல் 2** : நூலகத்தில் இரு நண்பர்கள் ஒரே கதைப் புத்தகத்தை இரவல் வாங்கக் காத்திருக்கிறார்கள்.



விசாகர் : முதலில் நீ படித்து முடித்ததும், நான் இரவல் பெற்றுக் கொள்கிறேன்.



புகழ் : நன்றி விசாகர்.

**சூழல் 3** : பள்ளிப் புத்தகக் கடையில் ஆறாம் ஆண்டு மாணவரும் முதலாம் ஆண்டு மாணவரும் புத்தகம் வாங்கக் காத்திருக்கின்றனர்.

ஆறாம் ஆண்டு மாணவன் : தம்பி, இப்பொழுது என் வகுப்பில் பாடம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் முதலில் புத்தகத்தை வாங்கிக் கொள்ளலாமா?

முதலாம் ஆண்டு மாணவன் : தாராளமாக அண்ணா.

நீங்கள் வேறு சில விட்டுக்கொடுக்கும் சூழல்களை உருவாக்கி நடித்துக் காட்டுக.



ஆசிரியர் குறிப்பு 14.2

பள்ளிக்குடியினரிடையே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையின் எடுத்துக்காட்டுகளை விளக்கச் செய்தல்.

அடைவு நிலை : 2 | வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் | உ.சி.தி: பயன்படுத்துதல் | 21ஆம் நூ.தி: குழுவாகச் செயல்படுதல்

கருத்துப் படிவம்

# பாடம் 3 விட்டுக்கொடுத்த தேவதை




உங்களின் நண்பனுக்கு விட்டுக்கொடுத்த ஒரு சூழலை நினைவு கூர்ந்து கூறுக.




ஆசிரியர் குறிப்பு 14.3 14.4

பள்ளிக்குடியினரிடையே விட்டுக்கொடுப்பதன் முக்கியத்துவத்தை விளக்குதல்.
பள்ளிக்குடியினரிடையே விட்டுக்கொடுப்பதால் ஏற்படும் மன உணர்வை விளக்கிக் கூறுதல்.

**அடைவு நிலை** : 4/5 **வி.வ.கூ:** சுற்றுச் சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** கொள்கை உள்ளவர்





கருத்துப் படிவம்

# பாடம் 4 ஒற்றுமை மேம்பட




1. மேற்கண்ட நிகழ்ச்சியில் பல்லின மாணவர்கள் ஒற்றுமையை வலுப்படுத்த எவ்வாறு விட்டுக்கொடுப்பர் என்பதைக் கலந்துரையாடுக.
2. மாணவர்கள் அன்றாடப் பள்ளி வாழ்க்கையில் எவ்வாறு விட்டுக் கொடுத்து நடக்க வேண்டும்?





ஆசிரியர் குறிப்பு 14.5

மாணவர்களைப் பள்ளிக்குடியினரிடையே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை அமல்படுத்தி ஒற்றுமையை மேம்படுத்தக் கூறுதல்.

**அடைவு நிலை** : 5/6 **வி.வ.கூ:** நாட்டுப்பற்று **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** சிந்தனையாளர்

திடப்படுத்துதல்


**விட்டுக்கொடுத்தலின்வழி ஏற்படும் நன்மைகளை எழுதுக.**




ஆசிரியர் குறிப்பு 14.3

மாணவர்களை விட்டுக்கொடுப்பதனால் ஏற்படும் நன்மைகளைக் கூறச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** உருவாக்குதல் **21ஆம் நூ.தி:** கொள்கை உள்ளவர்




குறைநீக்கல்

# விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை

**விட்டுக்கொடுக்கும் நடவடிக்கைகளுக்கு (✔) என அடையாளமிடுக.**

1. முரளி எப்பொழுதும் தன் நண்பர்களிடத்தில் விட்டுக்கொடுத்து நடப்பதால் அவனை அனைவரும் விரும்புவார்கள். ☐
2. 3 பாரதி வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் ஏழ்மையான மாணவனான அரவிந்தனுக்குப் பணத்தைக் கொடுத்து உதவியதால் அரவிந்தன் மகிழ்ச்சி அடைந்தான். ☐
3. அகமது ஓடும்போது தவறுதலாகப் பூச்சாடியைத் தட்டி விட்டான். அதனைக் கண்ட தோட்டக்காரர் பொறுத்துக் கொண்டார். ☐
4. சுட்டித்தனமும் இரக்கக் குணமும் கொண்ட சரவணன் சில சமயங்களில் தொந்தரவு செய்தாலும் அவனை மற்ற மாணவர்கள் சகித்துக் கொள்வார்கள். ☐
5. கமலன், தன் நண்பன் கருணனிடம் இரவல் வாங்கிச் சென்ற கதைப் புத்தகத்தைத் தவறுதலாகக் கிழித்துவிட்டான். அதனைக் கண்ட கருணன் கமலனைக் கோபித்துக் கொண்டான். ☐



ஆசிரியர் குறிப்பு 14.5

மாணவர்கள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைக் கொண்ட செயல்களைத் தெரிவு செய்து விளக்கச் செய்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் **21ஆம் நூ.தி:** தாங்கும் வலிமையாளர்



**வளப்படுத்துதல்**

**சூழலை வாசித்து நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கையை எழுதுக.**

| சூழல் | நீங்கள் என்ன செய்வீர்கள் |
| --- | --- |
| 1. பள்ளிப் பேருந்தில் ஏறுவதற்காகப் பாலர் பள்ளி மாணவன் காத்திருக்கிறான். | 1. ______________________ |
| 2. உணவு சாப்பிடுவதற்குமுன் உங்கள் நண்பர் கைகளைக் கழுவிடக் காத்திருக்கிறார். | 2. ______________________ |
| 3. விளையாட்டுப் போட்டியின்போது உங்கள் நண்பர் சிறு தவறு செய்துவிட்டார். | 3. ______________________ |
| 4. ஓவியம் வரையும்போது உங்கள் தோழி தவறுதலாக நீரை ஊற்றிவிட்டார். | 4. ______________________ |
| 5. வரிசையில் நிற்கும்போது உன் நண்பன் தவறுதலாக உன் காலணியை மிதித்து விட்டான். | 6. ______________________ |



**கருத்துக் கோவை**

விட்டுக்கொடுப்பதால் கெட்டுப்போவதில்லை

ஆசிரியர் குறிப்பு 14.2 — இந்நடவடிக்கையை நகல் எடுத்து மாணவர்களைச் செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ:** நன்னெறிப்பண்பு **உ.சி.தி:** மதிப்பிடுதல் **21ஆம் நூ.தி:** தொடர்பு கொள்ளும் திறன்



மதிப்பீடு


# விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை

**விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை தொடர்பான கூற்றுகளைத் தெரிவு செய்து எழுதுக.**

- ____________________________________________
  ____________________________________________
- ____________________________________________
  ____________________________________________
- ____________________________________________
  ____________________________________________
- ____________________________________________
  ____________________________________________



- மற்ற மாணவர்களின் கருத்துகளை மதித்து ஏற்க வேண்டும்.
- உங்கள் நண்பர் செய்யும் சிறுசிறு தவறுகளை மன்னிக்க வேண்டும்.
- பிடித்த நண்பர்களிடத்தில் மட்டுமே விட்டுக்கொடுத்து நடக்க வேண்டும்.
- தவறுதலாக எழுதுகோலை எடுத்துவிட்ட நண்பன்மீது கோபப்படக் கூடாது.
- வரிசையில் நடக்கும்போது முந்திச் செல்ல வேண்டும்.
- மற்ற மாணவர்களின் உணர்வுகளை மதித்து நடக்க வேண்டும்.
- பள்ளிப் பணியாளர்களிடத்தில் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும்.



ஆசிரியர் குறிப்பு 14.5

இந்நடவடிக்கையை நகல் எடுத்து மாணவர்களைச் செய்யப் பணித்தல்.

**வி.வ.கூ:** மொழி **உ.சி.தி:** பயன்படுத்துதல் **21ஆம் நூ.தி:** அன்பானவர்/பரிவுள்ளவர்

Dengan ini **SAYA BERJANJI** akan menjaga buku ini dengan baiknya dan bertanggungjawab atas kehilangannya serta mengembalikannya kepada pihak sekolah pada tarikh yang ditetapkan

**Skim Pinjaman Buku Teks**

**Sekolah** ____________________________________________

| Tahun | Darjah | Nama Penerima | Tarikh Terima |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**Nombor Perolehan :** ____________________________________

**Tarikh Penerimaan :** ____________________________________

# BUKU INI TIDAK BOLEH DIJUAL






RM 10.70
ISBN 978-983-42655-7-1
9 789834 265571
ET113001